Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 11 சனிக்கிழமை (28.10.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 332

# நிகழ்ச்சி நிரலுக்கு இரு தரப்புகளையும் இணங்க வைப்பதில் பெரும் இழுபறி!

## நேற்றுக் கடைசி நேரம் வரை நோர்வே தீவிர முயற்சி முதலில் பேசவைத்து சமரசம் செய்யவும் மாற்றுத்திட்டம்

- ஜெனிவாவிலிருந்து ந.வித்தியாதரன்-

ஜெனிவா, ஒக்ரோபர் 28

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இலங்கை அரச குழுவினருக்கும் இடையே இன்றும், நாளையும் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் அமைதிப் பேச்சுகளுக்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றைத் தயாரிக்கும் இறுதிநேர முயற்சிகள் பெரும் இழுபறி நிலையில் இருக்கின்றன.

பொதுவான நிகழ்ச்சி நிரல் ஒன்றுக்கு இரு தரப்புகளையும் இணங்க வைப்பதில் நோர்வே அனுசரணையாளர்கள் மும்முரமாக முயற்சித்து வருகின்றனர். பேச்சுக்கான அனுசரணைத் தரப்பின் பொறுப்பாளரான அமைச்சர் எரிக் சொல் ஹெய்ம் நேற்றுமாலை ஜெனிவா வந்தடைந்து இலங்கை அரசினதும், புலிகளினதும் பேச்சுக் குழுவினரை மாறி மாறிச் சந்தித்துப் பேசத் தொடங்கினார்.

எனினும், எவற்றைப் பேசுவது என்பதில் இருதரப்புகளும் தத்தமது நிலைகளில் விடாப்பிடியாக இருப்பதால் பொதுவான நிகழ்ச்சி நிரல் ஒன்றை இறுதிசெய்யும் விடயம் பெரும் இழுபறிக்குள் சிக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சமாதான முயற்சிக்குப் பொறுப்பான நோர்வேயின் அமைச்சர்எரிக்சொல்ஹெய்ம், நேற்று சுவிஸ் நேரப்படி மாலை 4 மணியளவில் ஜெனிவா வந்தடைந்தார்.

நோர்வேயின் விசேட சமாதானத் தூதர் ஜோன் ஹன்ஸன் போவருடன் சேர்ந்து எரிக் சொல்ஹெய்ம் உடனடியாகவே அரச பேச்சுக் குழுவினரையும் பின்னர் புலிகளின் குழுவினரையும் மாறி மாறிச் சந்தித்துப் பேசத் தொடங்கினார்.

சமாதானப் பேச்சுகள் இன்று ஆரம்பமாக இருக்கும் நிலையில் பேச்சுக்கான பொதுவான நிகழ்ச்சி நிரல் ஒன்றைத் தயாரிப்பதில் எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான அனுசரணைத் தரப்பு மும்முரமாக ஈடுபட்டுள்ளது. எனினும், நிகழ்ச்சி நிரல் விடயத்தில் இரு தரப்புகளின் இணக்கப்பாட்டைப் பெறுவதில் பெரும் சிக்கல் நிலை காணப்படுவதாக நேற்று இரவு இச்செய்தி

(08ஆம் பக்கம் பார்க்க)

### ஆவரங்காலில் கிளைமோர் தாக்குதல்; 2 சிப்பாய்கள் காயம்

அச்சுவேலி, ஒக்.28

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் ஆவரங்கால் சந்திக்குச்சமீபமாக - மரவேலைத் தொழிற்சாலைக்கு அருகில் - நேற்று முற்பகல் 10 மணிக்கு கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் இரு படையினர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தையடுத்து யாழ். பருத்தித்துறை வீதி ஊடான போக்குவரத்து சில மணிநேரம் தடைப்பட்டது. அச்சுவேலி, ஆவரங்கால் பகுதிகளில் பதற்றநிலை காணப்பட்டபோதும் சில மணி நேரத்தில் நிலைமை வழமைக்குத்திரும்பியது.(அ-1-11)

## பேச்சின் ஆரம்பத்தில் இரு தரப்புத் தலைவர்களும் தனித்தனியாக அறிக்கை வெளியிட இணக்கம்!

- ஜெனிவாவிலிருந்து ந.வித்தியாதரன்-

பிந்திய செய்தி

அரச மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கு இடையில் இன்று காலை ஆரம்பமாகும் பேச்சின்போது முதலில் இரு தரப்பு பேச்சுக்குழுக்களின் தலைவர்களும் தனித்தனியாக ஆரம்ப அறிக்கைகளைச் சமர்ப்பித்து உரையாற்றுவதற்கு நேற்று இலங்கை நேரப்படி நள்ளிரவு அளவில் இணக்கம் காணப்பட்டிருக்கிறது. இந்த இணக்கப்பாட்டின்படி அரச தரப்புக் குழுவில் அதன் தலைவரான அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி.சில்வாவும் புலிகள் தரப்புக்குழுவில் பேச்சுக்குழுத் தலைவரான சு.ப.தமிழ்ச்செல்வனும் தத்தமது தரப்புக் கருத்துக்களை முன்வைத்து - நியாயங்களைச் சுட்டிக்காட்டி - தனித்தனியாக ஆரம்ப அறிக்கைகளை வெளியிடுவர்.

இவ்வாறு ஆரம்ப அறிக்கைகளைத் தனித் தனியாக வெளியிடுவதற்கு இரு தரப்பினருக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்ட போதிலும், அதன்பின்னர் - இன்றைய பேச்சுக்களின்போது - என்ன விடயங்களைப் பற்றிப் பேசுவது என்பது தொடர்பில் இலங்கை நேரப்படி நேற்று

(08ஆம் பக்கம் பார்க்க)

## வாகரை படை நகர்வு புலிகளால் முறியடிப்பு

### ஜெனிவாவிலிருந்து இளந்திரையன் தகவல்

கொழும்பு, ஒக்.28

திருக்கோணமடு வழியாக, வாகரை - கட்டுமுறிவுப் பகுதியை நோக்கி முன்னேற முயன்ற இலங்கை இராணுவத்தினரை விடுதலைப் புலிப் போராளிகள் எதிர்த் தாக்குதல் நடத்திப் பின்வாங்கச் செய்துவிட்டனர் என்று 'தமிழ் நெற்' செய்திச் சேவை, புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையனை மேற்கோள் காட்டி நேற்றுச் செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்தப் படை நகர்வில் 300 இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ஜெனிவாவில் தங்கியிருக்கும் இளந்திரையன், இந்தத் தாக்குதல் சம்பவம் பற்றி மேலும் கூறியிருப்பதாவது:-

''நேற்று வெள்ளிக்கிழமை காலை 7.30

(08ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சு நிகழ்ச்சி நிரலை உடனடியாக தயாரிப்பது சிரமம் – அரசதரப்பு

கொழும்பு, ஒக்.28

ஜெனிவாவில் அரசதூதுக் குழுவினர் இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்ஸன் போவரை நேற்றுக் காலை இரு முறை சந்தித்துப் பேசினர் என்று அரச சமாதான செயலகப் பணிப்பாளர் கலாநிதி பாலித்த கொஹொன்ன நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

இன்று நடைபெறவுள்ள அரசு - புலிகள் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டு விட்டதா என அவரிடம் கேட்டபோது, ''இது நீண்ட காலப் பிரச்சினை. உடனடியாக நிகழ்ச்சி நிரலொன்றைத் தயாரித்துவிட முடியாது. இன்று (வெள்ளிக்கிழமை) காலை நோர்வேயின் ஜோன் ஹன்ஸன் போவரை இரண்டு தடவைகள் சந்தித்துப் பேச்சு நடத்தினோம்''.எனத் தெரிவித்தார். பேச்சுகள் சுமுகமாக இடம்பெறக் கூடும் எனவும் கலாநிதி பாலித்த கொஹொன்ன நம்பிக்கை தெரிவித்தார். (ஐ)

## சிறுசிறு விடயங்கள் பற்றி ஜெனிவாவில் பேசி நேரத்தை வீணடிக்க அரசு விரும்பவில்லையாம்

### இறுதித் தீர்வு பற்றியே பேசுவோம் என்கிறார் கொஹென்ன

சிறு சிறு விடயங்களைப் பற்றிப் பேசி நேரத்தை வீணடிக்க அரசு விரும்பவில்லை. கடந்த 25 வருடங்களாகத் தொடரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருகின்ற வகையில் பிரச்சினைக்கு ஓர் இறுதித் தீர்வை எட்டுவது தொடர்பாகவே ஜெனிவாவில் பேசுவோம்.

- இவ்வாறு தெரிவித்தார் அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளரும், அரச பேச்சுக்குழுப் பிரதிநிதிகளில் ஒருவருமான பாலித கொஹென்ன.

நேற்று இரவு பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஏ-9 பாதை திறக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் மக்கள் எதிர்நோக்கியிருக்கின்ற மனிதாபிமான நெருக்கடிகளை நீக்குவது உட்பட மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்தே இந்தப் பேச்சில் ஆராயப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் உறுதியாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் -

இவையெல்லாம் சாதாரண விடயங்கள்; சிறுசிறு பிரச்சினைகள். இவற்றைப் பற்றி இப்போது பேச நேரமில்லை என்று தெரிவித்திருக்கும் அரச சமாதான செயலக பணிப்பாளர், இறுதித் தீர்வு தொடர்பாகவே பேசப்பட வேண்டும் என்று தாங்கள் நோர்வே தரப்பிடம் வலியுறுத்தியிருக்

(08ஆம் பக்கம் பார்க்க)

### திருமலை – செல்வநாயகபுரத்தில் 2 இளைஞர்கள் சுட்டுக் கொலை!

கிண்ணியா, ஒக்.28

திருகோணமலை, செல்வநாயக புரம் 3 ஆம் கட்டையில் வைத்து நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்ட இருவரில் ஒருவர் கை, கால் கட்டப்பட்ட நிலையிலும், மற்றொருவர் கைக்கு விலங்கு போடப்பட்ட நிலையிலும் காணப்பட்டனர் என்று உப்புவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுட்டுக் கொல்லப்பட்டவர்களுள், ஒருவர் அன்புவழிபுரத்தைச் சேர்ந்த பாவேந்

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## அருட்திரு. யோனா போல் அரியரத்தினம்

[அங்கிலிக்கன் திருச்சபை, கண்டி]

காரைநகரைப் பிறப்பிடமாகவும் கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அருட்திரு. யோனா போல் அரியரத்தினம் நேற்று முன்தினம் (26.10.2006) வியாழக்கிழமை கண்டியில் காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று முற்பகல் 9 மணிக்கு கண்டியில் நடைபெறும். இன்று பிற்பகல் 3 மணிக்கு எமது இல்லத்தில் நினைவாராதனை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஜோ.ஐ.ஜெயரத்தினம்.**
**இணுவில் மேற்கு,**
**இணுவில்.**
(54754)

**தகவல்:**
**சகோதரர்கள்.**

## வீரசிங்கம் சந்திரமோகன் (மினிச்சந்திரன்)



யாழ்ப்பாணம், 221/7, கனகசபை ஒழுங்கை, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் சந்திரமோகன் (மினிச்சந்திரன்) நேற்று (27.10.2006) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் அமரர் வீரசிங்கம் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் வாசுகியின் பாசமிகு கணவரும் பவித்திரனின் அன்புத் தந்தையும் ஜெனித்தன், தர்மிலன் ஆகியோரின் அன்பு மாமனும் ரஞ்சிதவதனி, மதிவதனி, சந்திரகுமார் ஆகியோரின் சகோதரரும் ஜெயாநிதி, குலசேகரம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2006) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றாா, உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*221/7, கனகசபை ஒழுங்கை,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

**தகவல்:**
**வே.ஜெயாநிதி.**

## பாலசுந்தரம்பிள்ளை அங்கயற்கண்ணி

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ். அரசடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுந்தரம்பிள்ளை அங்கையற்கண்ணி அவர்கள் நேற்று (27.10.2006) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பாலசுந்தரம்பிள்ளையின் (முன்னாள் சுங்கத் திணைக்கள கலெக்ரர்) அன்பு மனைவியும் புவனேஸ்வரி, விசுவநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு அன்புத் தாயும் பரமேஸ்வரன் (D.P.D.H.S OFFICE), தமிழ்செல்வி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் பாலசங்கர் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்), சகானா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 83/11, தஞ்சி லேன்,**
**அரசடி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(54698)

**தகவல்:**
**திருமதி பரமேஸ்வரன்**
**புவனேஸ்வரி (மகள்).**

## திருமதி நாகராசா கனகம்மா (சரவணை)

யாழ்ப்பாணம், சரவணையைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்தவருமாகிய திருமதி நாகராசா கனகம்மா நேற்றுமுன்தினம் (26.10.2006) வியாழக்கிழமை கனடாவில் சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற கண்டி வர்த்தகரும் மன்னார் உயிலங்குளம் ஆனந்தா ஸ்ரோர்ஸ் உரிமையாளருமாகிய ப.மு.நாகராசா அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற நாகேந்திரர் - சீதேவிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முத்துக்குமார் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் கனகராசா (ஆனந்தா ஸ்ரோர்ஸ், உயிலங்குளம்), வரதராசா (கனடா), புஸ்பராணி (திருகோணமலை), யோகராணி (வவுனியா), செல்வராணி (ஆசிரியை, மன்/தாழ்வுபாடு RCTMS) ஆகியோரின் பாசமிகு தாயும் மகாலெட்சுமி (மன்னார்), புஸ்பமலர் (கனடா), கனகராசா (ஓய்வுபெற்ற உதவிக் கணக்காளர், துறைமுக அதிகார சபை, திருகோணமலை), அருளானந்தன் (லண்டன்), யோகராசா (டினேஸ் அரிசி ஆலை, கீரி மன்னார்) ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், பூங்காவனம், கமலாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, நாகம்மா, சுப்பிரமணியம், இராசம்மா ஆகியோரின் மைத்துனியும் சிவகுமாரன் (தேசிய சேமிப்பு வங்கி, மானிப்பாய்), Dr.நந்தகுமாரன் (உதவி சுகாதாரப் பணிப்பாளர், கிளிநொச்சி), விஜிதா (ஆசிரியை, திருகோணமலை, கும்புறுப்பிட்டி அ.மி.த.க. பாடசாலை), பரணீதரன் (விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர் D.S. அலுவலகம், நானாட்டான்), காயத்திரி, ஜெயகாந்தன் (விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம்), சுரேஸ்குமார் (கனடா), ஹேரபனா (கனடா), கஜரூபன் (மாவட்ட நீதிமன்றம், வவுனியா), கோகுலன், கோபிகா, தனஞ்ஜயன், தர்ஷிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கிஷோர், மதுமிதா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 30.10.2006 திங்கட்கிழமை கனடா ரொரன்ரோ நகரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மு.நா.கனகராசா,*
*231, பெரியகடை, மன்னார்.*
*தொ.பே. 023-2232963*
*மு.நா.வரதராசா, கனடா.*
*தொ.பே. 0014162643804* (சி/51233)

**தகவல்:**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

## தென்மராட்சியில் கணிப்பீட்டுச் செயலமர்வு

தென்மராட்சி, ஒக்.28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த.உயர்தர வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பாடசாலை மட்ட கணிப்பீட்டுச் செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

க.பொ.த. உயர்தர வகுப்புகளில்பாடங்கள் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களையும் செயலமர்வில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

## செயலமர்வு ஒத்திவைப்பு

வடமராட்சி,ஒக்.28

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் மாணவர்களின் வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாகவுள்ள ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளது என வலயத்தின் வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலுக்குமான ஆசிரிய ஆலோசகர் தெரிவித்தார்.

இச் செயலமர்வு இன்று நடைபெறுவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும்- தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டது என்றும் -

முன்னர் அறிவிக்கப்பட்ட நேர ஒழுங்கிலும் அதே நிலையத்திலும் செயலமர்வு நடைபெறும் எனவும் - தெரிவிக்கப்பட்டது. (1-202)

## குடும்ப அட்டை மீளாய்வு

நல்லூர்,ஒக்.28

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/108 கிராம சேவகர் பிரிவில் வதியும் குடும்பத்தினர் தமது குடும்ப பங்கீட்டு அட்டைகளை நாளை ஞாயிற்றுக்கிழமை மீளாய்வுக்கு உட்படுத்துமாறு கிராம அலுவலர் எஸ்.சந்திரகுமார் கேட்டுள்ளார்.

பங்கீட்டு அட்டை, அடையாள அட்டை ஆகியவற்றுடன் தமது அலுவலகத்துக்கு வருமாறு அவர் கேட்டுள்ளார். (1-203-111)

## 578 தபால் பொதிகள் நேற்று எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம்,ஒக்.28

திருகோணமலையில் இருந்து 578 தபால் பொதிகள் கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு நேற்று எடுத்துவரப்பட்டுள்ளன.

இத் தபால் பொதிகளை இன்று சனிக்கிழமை அங்கிருந்து எடுத்துவந்து தரம் பிரித்து திங்கட்கிழமை முதல் விநியோகிக்க இருப்பதாகவும் -

இத் தபால் பொதிகளில் பெரும் எண்ணிக்கையானவை பார்சல்களே வந்துள்ளன என்றும் -

வடபிராந்திய பிரதித் தபால்மா அதிபர் நாயகம் வி.குமரகுரு தெரிவித்தார். (அ-1)

## மினி தியேட்டர் உரிமையாளர் யாழ். நகரில் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஒக்.28

யாழ். நகரப் பகுதியில் - கன்னாதிட்டி வீதியில் - நேற்று முற்பகல் 9.45 மணியளவில் மினித் தியேட்டர் உரிமையளார் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த மினிச் சந்திரன் என அழைக்கப்படும் வீரசிங்கம் சந்திரமோகன் (வயது-42) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இவர் கன்னாதிட்டி வீதியூடாக சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள் இவரைச் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-203-15-78-11-88)

## மூத்த கவிஞர் இராசரத்தினம் காலமானார்

யாழ்ப்பாணம், ஒக்.28

மூத்த கவிஞரும் எழுத்தாளரும் பிரபல வைத்தியரும் முன்னாள் அதிபருமான சி.இராசரத்தினம் தமது 91ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இறைமணி என்ற புனைப் பெயரிலும் சொந்தப் பெயரிலும் ஈழகேசரி காலத்தில் இருந்தே கவிதைகளை எழுதியுள்ளார். இவர் ஒரு சிறந்த எழுத்தாளரும் ஆவார். 'வாழ்வுச் சுவடுகள்' என்ற இவரது நூல் தமிழ் சமூகத்தின் பழக்க வழக்கங்களை, பண்பாட்டுக் கூறுகளை சித்திரிப்பதாக அமைந்தது.

புகழ்பெற்ற வைத்தியராகவும் திகழ்ந்த இவர் பல துறைகளில் [illegible] கொண்டு [illegible].

இவர் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி இரா.சிவச்சந்திரனின் தந்தையும்ஆவார்.(அ)

# மரண அறிவித்தல்கள்

## சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம்



வேலணையைப் பிறப்பிடமாகவும் 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட பிரபல வைத்திய கலாநிதியும், இளைப்பாறிய அதிபரும், கவிஞரும், எழுத்தாளருமாகிய சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம் நேற்று (27.10.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலணைவைத்தியர் சிதம்பரப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்ற ஆசிரியை உருக்குமணியின் அன்புக் கணவரும் திருமதி புஸ்பதிலகவதி கணேசலிங்கம் (இளைப்பாறிய பிரதிக் கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி), திருமதி புஸ்பஇராசவதி சின்னையா (இளைப்பாறிய அதிபர், விரிவுரையாளர் தேசிய கல்வி நிறுவனம்), புஸ்பஇரட்ணவதி (பேராசிரியர்), சிவசந்திரன் (கலைப்பீடாதிபதி யாழ். பல்கலைக்கழகம்), திருமதி சிவமலர் செகராசா (இளைப்பாறிய உபஅதிபர்), திருமதி இராசமலர் சற்குணநாதன் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற பாலச்சந்திரன் (மக்கள் வங்கி உதவி முகாமையாளர்), ஜெயச்சந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சேர் கணேசலிங்கம் (இளைப்பாறிய அதிபர், மீசாலை), காலஞ்சென்ற த. சின்னையா, திருமதி சரோஜா சிவசந்திரன் (இயக்குனர், மகளிர் அபிவிருத்தி நிலையம்), திருமதி பா.சிவபாக்கியம், சற்குணநாதன் (பரிஸ்டர் ஆஸ்திரேலியா), க.செகராசா, திருமதி ஜெ.மாலினி ஆகியோரின் அன்பு மாமனும் திருமதி வளர்மதி விவேகானந்தன் (கனடா), க.அருள் (விரிவுரையாளர், சட்டபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்), கலாநிதி சிவமதி சிவச்சந்திரன் (பீடாதிபதி, விவசாயபீடம், யாழ். பல்கலைக்கழகம்), வைத்தியகலாநிதி அருள்மொழி (லண்டன்), கலாநிதி க.அருள்ராஜ் (லண்டன்), அனுஷா ரவிக்குமார் (கனடா), வைத்தியகலாநிதி கவிதா சூரியகுமாரன் (லண்டன்), வைத்தியகலாநிதி யாழினி அரவிந்தன் பாரதி, கலாநிதி நர்மதா குருபரன், விஜிதா, அகலியா, ஷர்மிலா, கிருஸ்ணா, ராஜ்குமார், ஹரன் ஆகியோரின் பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*121, 2 ஆம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.* (54752)
*தொ.பே. 021 222 2459*

**தகவல்:**
**பேராசிரியர் இரா.சிவசந்திரன்**
(மகன் - கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

## திருமதி வைத்தியலிங்கம் விசாலாட்சி

(வேலணை மேற்கு)

வேலணை மேற்கு, தலைகாட்டி மூதாட்டியார் திருமதி வைத்தியலிங்கம் விசாலாட்சி நேற்றுமுன்தினம் (26.10.2006) வியாழக்கிழமை காலை கொழும்பில் காலமானார்.

அன்னார் சரவணை, தெங்கங்குளம் ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்பிகை ஆலய ஆரம்ப ஸ்தாபகர் அறங்காவலர் காலஞ்சென்ற வே.முருகேசு - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் நாரந்தனை வடக்கு காலஞ் சென்ற சுப்பிரமணியம் - செல்லமுத்து தம்பதியரின் அருமை மருமகளும் அமரர் சு.வைத்தியலிங்கம் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசான் - உபஅதிபர்) அவர்களின் அன்புத் துணைவியும் கவிஞர் வேலணை வேணியன் (உப தலைவர், மேலக மக்கள் முன்னணி, கொழும்பு மாநகர சபை உறுப்பினர், தலைவர், அகில இலங்கை கண்ணதாசன் மன்றம்), திருமதி சீ.சண்பகாதேவி, திருமதி சீ.கலைவாணி ஆகியோரின் பாசமிகுயும் திருமதி க.சிவயோகம்மா (டென்மார்க்), சி.சீவரட்ணம், க.சீவரட்ணம் (உரிமையாளர், கொட்டாஞ்சேனை சீவம் இன்டஸ்றீஸ், கொழும்பு-13) ஆகியோரின் அன்பு மாமியும் க.தவயோகவேணியன் (டென்மார்க்), திருமதி கு.சகுந்தலா (டென்மார்க்), சு.குணலிங்கம் (டென்மார்க்), திருமதி த.பிரிய தர்ஷினி (டென்மார்க்), திருமதி ம.மாலினி (கனடா), திருமதி கு.கார்த்திகா (கொழும்பு), சி.மணிவண்ணன் (கனடா), கி.குருபரன் (சிலிங்கோ கணக்காளர்), செல்வன் சீ.நிஷாந்தன் (மாணவன், கல்கிசை செயின்ற் தோமஸ் கல்லூரி) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் செல்வன் த.நிதூர்ஷன், செல்வி த.சுமிலா, த.அலெக்ஸ், செல்வி கு.யனிதா, செல்வன் கு.பிரிஜன், செல்வன் கு.யோக்கிம் (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்ற சு.நா.வேலுப்பிள்ளை (ஓய்வுபெற்ற Ovrseer, P.W.D.) திருமதி த.சுபத்திரை, க.சண்முகம் ஆகியோரின் அருமை மைத்துனியும் காலஞ்சென்ற திருமதி பொ.சிவபாக்கியம், மு.மயில்வானகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ்.இந்துக் கல்லூரி), மு.பொன்னுத்துரை, மு.இராசையா, திருமதி ந.பொன்னம்மா, திருமதி வே.தங்கம்மா, மு.மாணிக்கம் மற்றும் திருமதி கா.சி.இராசம்மா (யாழ்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (29.10.2006) ஞாயிற்றுக்கிழமை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் காலை 9 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 2.30 மணிக்கு இறுதிக் கிரியைகள் ஆரம்பமாகிக பிற்பகல் 4 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கவிஞர் வேலணை வேணியன்
(மகன் - கொழும்பு மாநகரசபை உறுப்பினர்)
க.சீவரட்ணம் (மருமகன் - சீவம்ஸ்)

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**
(54753)

29, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13. தொ.பே. 2435916, 441859 வேணியன் 0773500164

# கண்ணீர் அஞ்சலி

## வைத்திய கலாநிதி சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம்

[இளைப்பாறிய அதிபர்]

எமது துறையின் பேராசிரியரும் கலைப்பீடாதிபதியுமாகிய பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் அவர்களின் அன்புத் தந்தை 27.10.2006 அன்று காலமான செய்திகேட்டு ஆழ்ந்த கவலை கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேலணை பெருங்குளத்து முத்துமாரி அம்மனை இறைஞ்சுகின்றோம்.

**புவியியற்றுறையினர்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**
(54692)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நால்வருக்கு ஆசிரிய நியமனம்

யாழ்ப்பாணம், ஒக்.28

கல்வியியற் கல்லூரியின் டிப்ளோமா தாரிகளில் நான்கு பேருக்கு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சால் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் முதலாம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டுமெனவும்-

அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும்- கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

நியமனம் வழங்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு:

விஜயகீதா தங்கவேலாயுதம் (குடத்தனை மேற்கு) - வடமராட்சி வலயம் - ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை, மோகனரஜனி பாலசுப்பிரமணியம் (கரணவாய் வடக்கு - கரவெட்டி) - வடமராட்சி வயலம் - தாளையடி றோ.க.த.க. பாடசாலை, இரத்தினசபாபதிக்குருக்கள் அனுரமணன் (வியாபாரி மூலை, பருத்தித்துறை) - தீவக வலயம் -அனலைதீவு சதாசிவ வித்தியாலயம், செ.தர்மகுமாரன் (வீரபத்திரர் கோயிலடி, கோப்பாய் தெற்கு) - வவுனியா தெற்கு வலயம் - பெரிய கோமரசன் குளம் மகா வித்தியாலயம். (1-203)

# யாழ்.மாநகரசபை பிரதேசத்தில் வடிகால் புனரமைப்புப் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 28

மழை காலம் ஆரம்பித்துள்ளமையால் தற்போது கையிருப்பில் உள்ள மூலப் பொருள்களைக் கொண்டு வடிகால் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று யாழ். மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்துள்ளார்.

மக்கள் வடிகால்களை குப்பை போடும் இடமாக பயன்படுத்தி வருகின்றனர். இதனால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்து டெங்கு நோய் பரவும் அபாயநிலை தோன்றியுள்ளது.

எனவே, இவ் விடயத்தில் மக்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை-

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள குளங்களில் 22 குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மாநகர எல்லைக்குள் 37 குளங்கள் உள்ளன. இதில் 15 குளங்கள் நல்லநிலையில் உள்ளன. அவற்றுக்கு பாதுகாப்பான முறையில் வேலிகள் போடப்பட்டுள்ளன.

ஏனைய 22 குளங்களுமே புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன. நிலத்தடி நீர் பாதுகாப்புக்கு இதுபோன்ற புனரமைப்புகள் மிக உகந்ததாக இருக்கும்- என்றும் அவர் மேலும் கூறினார்.

(1-203-111-79)

# யாழ்.வலயப் பாடசாலைகளில் கல்வி அபிவிருத்தி ஆய்வுகள்

நல்லூர், ஒக்.28

பாடசாலைகளில் கல்வியை அபிவிருத்தி செய்யும் இசுறு திட்டத்தின் கீழ் யாழ். வலயத்தில் ஆறு பாடசாலைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வலயத்திலுள்ள 6 பாடசாலைகளிலும் தலா ஓர் அதிபர், ஓர் ஆசிரியர், ஒரு மாணவர், ஒரு பெற்றோர் எனத் தெரிவுசெய்யப்பட்டு அவர்களிடம் வினாக்கொத்துகள் மூலம் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த ஆய்வுகளை கல்வி அமைச்சு மேற்கொண்டு வருவதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்தார். (202-111)

## கடந்த புதன்கிழமை வெளியான 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குரிய மாதிரி வினாத்தாளின் வினாக்களுக்கான விடைகள்

1)3 2) 2 3) 3 4) 1 5) 2 6) 2 7) 3 8) 2 9) 1 10) 1 11) 2 12) 1 13) 2 14) 2 15) 3 16) 2 17) 2 18) 3 19) 3 20) 1 21) 3 22) 2 23) 1 24) 1 25) 2 26) 3 27) 1 28) 2 29) 3 30) 1

31) புனித - தந்தி - திகதி

32) இ.வ 1.கொக்கு 3.புறம்
மே.கீ 1.கொம்பு 2.குடம்

33) 10 34) 30 ரூபா 35) 3/ மூன்று

36) △ /முக்கோணி 37) **B** 38) 3

39) விமல் 40) நிமல்

பகுதி **II**

*1.* 1) தருமம் 2) தந்தை தாயைப் பேணுதல் / பெற்றோரைப் பேணுதல்/ தந்தை / தாயைப் பேணும் தருமம் 3) மனம் உருகுதல்/ மனம் நெகிழ்தல்/ மனம் அழுதல்/ மனமிரங்கல் 4) நான் நினைத்தேன் 5) பெற்றோர்/ முதுகுரவர் 6) கன்று 7) தாய் 8) நீங்கள் 9) நன்றி புரிந்தோருக்கு/ நன்றி புரிந்தோர் 10) பருவத்தே பயிர் செய்/ காற்றுள்ள போதே தூற்றிக் கொள்/ அலைமோதும் போதே தலை முழுகு

*2.* 1) மோகன் குளங்கள் பற்றிய கதைகள் பலவற்றைச் சேகரித்தான்/ குளங்கள் பற்றிய கதைகள் பலவற்றை மோகன் சேகரித்தான் 2) பாதையைக் கடக்க எப்போதும் மஞ்சள் கோட்டையே பயன்படுத்துவோம்/ எப்போதும் பாதையைக் கடக்க மஞ்சள் கோட்டையே பயன்படுத்துவோம்

*3.* 1) உடனே மறைந்துவிடும்/ மறைந்துவிடும்/ இல்லாமற்போய்விடும் 2) நிலைத்திருக்கும்/அழியாதிருக்கும்/ ஆழமாக பதிந்திருக்கும்/என்றும் அழியாமல் இருக்கும்.

*4.* 1) பரிசளிப்பு 2) முயற்சி 3) ஆராய்ச்சி

*5.* **1. Stamps / STAMPS**
**2. Nose / NOSE**
**Ear / EAR (Ears / EARS )**

*6.* 1) காலை வந்தனம் / காலை வணக்கம்/ நல்ல காலைப்பொழுதாகுக 2) தயவு செய்து இங்கே வா/ தயவு செய்து வாருங்கள்/ தயை கூர்ந்து இங்கே வாருங்கள்/ தயவு செய்து இங்கே வாருங்கள் 3) இது என்ன? / என்ன இது?

*7.* 1) அண்ணா சோறு சாப்பிடுங்கள் / அண்ணா, சோறு உண்ணுங்கள்.
நன்றி தங்கை/ தங்காய்/ தங்கச்சி

*8.* 2 *9.* 3 *10.* 4 *11.* 2 *12.* 1 *13.* 2 *14.* 4 *15.* 3 *16.* 3 *17.* 1 *18.* 2 *19.* 1 *20.* 1 *21.* 4 *22.* 3 *23.* 3 *24.* 1 *25.* 2 *26.* 2 *27.* 3 *28.* 2 *29.* சீதேவியார் செங்கழுநீர் *30.* நன்னாரி *31.* முருங்கை *32.* (விடை இல்லாததால் 1 புள்ளி) *33.* வாத்து *34.* பருந்து *35.* சேவல் *36.* மரங்கொத்தி *37.* 12 *38.* பி.ப 1.05/ பிற்பகல் 1.05/ 13.05 மணித்தியாலம் *39.* ரூபாய் 50/ ரூ.50 / 50= *40.* 107

# முள்முருக்கையில் ஏற்பட்ட நோய்த்தாக்கம் வெற்றிலை செய்கையைப் பாதிக்கின்றது

## செய்கையாளர் கவலை

வலி.தென்மேற்கு, ஒக்.28

முள்முருக்கை மரங்களில் ஏற்பட்டிருக்கும் நோயினால் வெற்றிலைச் செய்கைக்கும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக இப்பிரதேசத்திலுள்ள வெற்றிலைச் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வெற்றிலைக் கொடி உயர்ந்து படர்வதற்கு முள்முருக்கை மரங்களே தொன்று தொட்டு பயன்படுத்தப்பட்டு வருவதாகவும்-

தற்போது இந்த முள்முருக்கை மரங்கள் புதியதொரு கொடிய நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதால் அவற்றை வெட்டி அழித்து விட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும்-

முள்முருக்கை மரம் வேர்கள் குறைவாக இருப்பதாலும் உயர்ந்து வளரும் தன்மையுடையதாக இருப்பதாலும் தொன்றுதொட்டு வெற்றிலைச் செய்கைக்கு- கொடி படர்ந்து உயரே வளர்வதற்கு இம் மரத்தையே பயன்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (1-135)

# 'உரிமையில் முகிழும் சமாதானம் நோக்கி' நாளை சர்வமத பஜனை வழிபாடு

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ்.மறை மாவட்ட நீதி சமாதான ஆணையமும் திருமறைக்கலா மன்றமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 'உரிமையில் முகிழும் சமாதானம் நோக்கி' சர்வமத பஜனை வழிபாடு நாளை பிற்பகல் 3.30 மணிக்கு டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலா மன்றத்தின் கலைக் கோட்டத்தில் இடம்பெறவுள்ளது.

வன்செயல்கள், பட்டினிச்சாவு, அகதி வாழ்வு போன்றன இம் மண்ணை விட்டு ஒழியவும் மனித மாண்பு, கௌரவத்துடனும் தமிழ் மக்கள் நிம்மதியுடனும் வாழ வழிசமைக்க இறைவனிடம் வேண்டி இந்த வழிபாடு இடம்பெறவுள்ளது.

சர்வ மதத் தலைவர்களும் இதில் பங்கு பற்றவுள்ளனர். அனைவரையும் வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-203)

# யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் விசேட வகுப்புகள்

யாழ்ப்பாணம். ஒக். 28

தொழில்நுட்பக் கல்லூரிகளில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் 2006ஆம் ஆண்டு இறுதிப் பரீட்சையில் தோற்றவுள்ள யாழ். தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களுக்கு மேலதிகமாக விசேட வகுப்பு நடத்தப்பட்டு வருகின்றன என்று கல்லூரி அதிபர் எஸ்.யோகராஜா தெரிவித்தார்.

மாணவர்களின் நலன் கருதி விரிவுரை வகுப்புகள் மட்டுமன்றி செயன்முறை வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை இந்த வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இழந்த கல்வியை ஈடுசெய்யும் நோக்குடன் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன - என்று அவர் மேலும் தெரிவித்தார். (1-203-88)

# சிறுவர் முதியோர் தின நிகழ்வுகள்

சமூக அபிவிருத்தி மன்றத்தினர் நடத்தும் சிறுவர் முதியோர்தின நிகழ்வும் மரம் நடுகையும் மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் சர்வோதய அறங்காவலர் செல்வி பொன்னம்பலம் ஜமுனதேவி 'சிறுவர் பராமரிப்பு' என்ற தலைப்பிலும் சைவப் புலவர் ஸ்ரீதரன் 'முதியோர் பாதுகாப்பு' என்ற தலைப்பிலும் உரைநிகழ்த்தவுள்ளனர்.

சிறுவர்களது கலை நிகழ்வும் மரம் நடுகையும் இடம்பெறும்.

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆசானும் கலைப்பீடாதிபதியுமாகிய
பேராசிரியர் இரா.சிவச்சந்திரன்
அவர்களின் அன்புத் தந்தை

**வைத்திய கலாநிதி சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம்**
(இளைப்பாறிய அதிபர்)

அவர்கள் 27.10.2006 அன்று காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

புவியியற் கழகம்,
யாழ். பல்கலைக்கழகம். (54691)

## 43ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் - நன்றி நவிலலும்

மண்ணில் 17 * 04 * 1953



விண்ணில் 16 * 09 * 2006

**அமரர் நாகேந்திரம் லிங்கநாதன் (ரஞ்சன்)**
(இலங்கை மின்சார சபை, சுன்னாகம் பணிமனை ஊழியர்)

அன்பைச் சொரிந்து
பண்பை வளர்த்து
முயற்சி எனும் காற்றை
முழுநாளும் சுவாசித்து
உலகில நாமுயர
உற்ற வழிகாட்டிய
எம் அன்புத் தெய்வத்தை
இந்நாளெல்ல எந்நாளும் மறவோமே.

கடந்த 16.09.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி அறிந்து எமது துயரத்தில் கலந்து கொண்டோருக்கும் பத்திரிகைகள், தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், அன்னாரின் பூதவுடலுக்கு மலர் வளையம் சாத்தி இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட சக மின்சார சபை ஊழியர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் பல வழிகளில் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று [28.10.2006] சனிக்கிழமை 10மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஏழாலை மேற்கு,*
*நாவலடி, சுன்னாகம்.* (54686) குடும்பத்தினர்.

**IIS**

**விசேட பிரிவு ஆரம்பம்**

Eng. Drawing & AutoCAD

**29.10.2006 (09.00 மணி)**

அனைத்து மாணவர்களின்
வேண்டுகோளுக்கிணங்க பிரிவு II
ஆரம்பமாகவுள்ளது.

**Director**
**# 100, Clock Tower Road, Jaffna.**
**T.P. No.: 021 222 2831**

## தவறிவிட்டது

தியாகராஜா நிஷங்கன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (862651405V), வி.அ. அட்டை (0902015253) என்பன சட்டநாதர் ஆலயத்திற்கு அண்மையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் ...

## துயர் பகிர்கின்றோம்



*எமது பாடசாலையின் முன்னாள்*
*ஆங்கில ஆசிரியை*
திருமதி **சத்தியபாமா தயாளன்**
*(07.07. 1986 - 30.10.1995)*

அவர்களின் மறைவு எமக்கு ஆழ்ந்த கவலையைத் தருகின்றது. அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, துயருறும் அவரது குடும்பத்தவர் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

(54688)
பாடசாலைச் சமூகம்
*யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை*

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*இகத்தில் 20 . 07 . 1940*



*அகத்தில் 08 . 11 . 2005*

**அமரர் க.சிவபாதசுந்தரம்** பீ.ஏ. (சிறப்பு)
(பட்டயக் கணக்காளர்)
திதி: 28.10.2006

குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து
அன்போடும் பண்போடும்
பாசத்தோடும் பேணி பாதுகாத்து
எம்மை நல்வழி நடத்தி
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களை இந்நாளில் வணங்கி நிற்கிறோம்.

*'சிவஸ்தான்'*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

திருமதி நிர்மலா சிவபாதசுந்தரம்,
நகுலன் சிவபாதசுந்தரம்,
துஷ்யந்தன் சிவபாதசுந்தரம்,
ந.கேசவி - து.கஜால்.

(54672)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கியக் களம் ஒன்றுகூடல்

## 'மானம் காத்த மறக்குடி வேந்தன்'

புலவர் ம.பார்வதிநாதசிவம் அவர்களின்

# கவிதை நூல் வெளியீட்டு விழா

இடம்:
**யா/இராமநாதன் கல்லூரி மண்டபம் - மருதனார்மடம்**
காலம்:
**நாளை (29-10-2006) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி**

தலைமை: **சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள்**
பிரதம விருந்தினர்: **திரு .ப.விக்கினேஸ்வரன் அவர்கள்**
*(வலயக் கல்விப் பணிப்பாளர்- வலிகாமம்)*
தேவாரம்: **திருமதி வி. நாகேஸ்வரன் அவர்கள்**
*(உதவிக் கல்விப் பணிப்பாளர், சங்கீதம் - வலிகாமம்)*
வரவேற்புரை: **திரு.கி.மகேந்திரராஜா அவர்கள்**
*(அதிபர், அருணோதயக் கல்லூரி)*
தலைமை உரை :
ஆசியுரை:
**கலாநிதி பண்டிதை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்**
வாழ்த்துரை: **திரு.இ.சங்கர் அவர்கள்**
பிரதமவிருந்தினர் உரை:
வெளியீட்டுரை: **திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள்**
*(பிரதிக்கல்விப் பணிப்பாளர்-வலிகாமம்)*
முதல்பிரதி வழங்கல்
வழங்குபவர்: **பிரதம விருந்தினர் அவர்கள்**
பெறுபவர்: **ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் அவர்கள்**
சிறப்பு பிரதிகள் வழங்கல்
மதிப்பீட்டுரைகள்
★ **திருமதி பா.கணேசதுரை அவர்கள்**
*(ஆசிரியர், மகாஜனக் கல்லூரி)*
★ **திரு.ஈ.குமரன் அவர்கள்**
*(விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)*
நன்றியுரை: **திரு.பா.மகாலிங்கசிவம் அவர்கள்**
*(ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)*
**நிறைவு** (54677)

*குறிப்பு: நூலின் விலை 150/= மண்டபத்தில் மட்டும்100/=. கலை இலக்கியக் களத்தின் ஏனைய நூல்களும் மண்டபத்தில் கிடைக்கும்.*

## வல்லைச் சந்தியில் வாகன விவரம் பதிவு

உடுப்பிட்டி, ஒக்.28

வடமராட்சி - யாழ். நகர் இடையே பயணிக்கும் வாகனங்களின் விவரங்களை இராணுவத்தினர் வல்லைவெளிச்சந்தியில் வைத்துப் பதிவுசெய்துவருகின்றனர்.

வல்வெட்டித்துறை - நெல்லியடி - யாழ். நகர் முச்சந்தியிலுள்ள இராணுவத்தினர் அச் சந்தியூடாகச் செல்லும் வாகனங்களின் இலக்கங்கள், பயணிகளின் எண்ணிக்கை, சாரதியின் பெயர், போக்குவரத்துச் செய்யும் இடம் போன்ற விவரங்களைப் பதிவுசெய்து வருகின்றனர். (202-155)

## கையெழுத்துச் சஞ்சிகை போட்டி முடிவுகள்

தென்மராட்சி,ஒக்.28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவரிடையே நடத்தப்பட்ட கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டிகளின் முடிவுகள் வலயக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டிகளில் பங்குபற்றிய சஞ்சிகைகளின் பெயரும் பாடசாலைகளும் வருமாறு:

**இடைநிலை- பிரிவு 1**
**(தரம் 6,7 வகுப்பு)**

முதலாம் இடம் -அரும்பு- சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 2ஆம் இடம்-தாரகை- கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., 3ஆம் இடம்-உதயம்-மட்டுவில் சரஸ்வதி வித்தி.

**இடைநிலை பிரிவு 2**
**(தரம் 8,9 வகுப்புகள்)**

முதலாம் இடம்-கண்ணிகை-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., 2ஆம் இடம்-இளம்பிறை- சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 3ஆம் இடம்-இளம்சுவடி-சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**இடைநிலை பிரிவு 3**
**(தரம் 10,11 ஆம் வகுப்புகள்)**

முதலாம் இடம்-பூந்தளிர்-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., 2ஆம் இடம்-சிந்தனை முத்துக்கள்-சாவகச்சேரி மகளிர் கல்லூரி, 3ஆம் இடம்-அவிர்மலர்-மீசாலை வீரசிங்கம் ம.வி.

**உயர்நிலை (தரம் 12, 13 வகுப்புகள்)**

முதலாம் இடம்-அவிர்கதிர்- மீசாலை வீரசிங்கம் ம.வி., 2ஆம் இடம்-ஆதவன்- கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., 3ஆம் இடம்- சிறகுகள்-சாவகச்சேரி மகளிர் கல்லூரி. (202)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 - 06 - 1975
உதிர்வு 28 - 10 - 2003



செல்வன்

## சோதிலிங்கம் திருக்குமார் (திரு)

*அகிலத்தில் எம்மையெல்லாம் ஆறாத்துயரமதில்*
*ஆழ்த்திவிட்டு நீ சென்று மறைந்ததேனோ?*
*நீ இல்லையென்று நாள்தோறும்*
*உன் நினைவில் மூழ்கியிருப்பதனால்*
*என்றும் எம் உள்ளத்தில் வாழும் உன் உருவம்*
*ஒருமுறைதான் முன்னாலே வந்தால்தான் ஆகாதோ?*
*என்று நாம் ஏங்கி இரு விழிநீர் சொரிந்து நிற்க*
*வானுலகைவிட்டு இங்கே வராதிருப்பதேனோ?*
*வரும் வழியை விழி பார்த்து ஏங்கி நாம்*
*இங்கிருந்து அரன் பாதம் தொழுகின்றோம்*
*அவன் நிழலில் உன் ஆத்மா*
*என்றும் சாந்திபெற்று*
*நீங்காது வாழ்ந்திருக்க...*

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*


சிவப்பிரகாச வித்தியாசாலை,
வல்லை வீதி, சங்கானை.
(54677)

*நீங்கா நினைவுகளுடன்:*
**அப்பா, அம்மா, சகோதரர், சகோதரி, மருமகன்.**

# 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் (செல்வன்)

## சண்முகரத்தினம் மோகனதாஸ் (சாம்)



**மலர்வு**
**09.04.1979**

**உதிர்வு**
**16.09.2006**

**பாரினிலே எம்பவளமாக வந்தவனே!**
**பார்ப்பவர் மனதில் நிறைந்து நின்றவனே!**
**மலர் இதழ்களில் மறைந்து நிற்கின்றாய்**
**மழைத்துளிகளில் புன்னகை செய்கின்றாய்**
**கண்ணீரில் உன் கமல முகம் தெரியுதடா**
**காலமெல்லாம் கலங்கிட வைத்துச் சென்றாயே!**
**கண்மணியே! கண்ணீர் மலர்தூவி அஞ்சலிக்கிறோம்.**

*அம்பனை, தெல்லிப்பழையைச் சேர்ந்த சண்முகரத்தினம் (கிளி அண்ணை) - குலமணிதேவி தம்பதியரின் பாச மிகு மூத்த செல்வனும் சுரேந்திரதாஸ் (சுரேன்) அவர்களின் அன்புச் சகோதரனும் அம்பனை தெல்லிப்பழையைச் சேர்ந்த கிருஸ்ணர் - சின்னம்மா தம்பதிகளதும் கீரிமலையைச் சேர்ந்த வல்லிபுரம் - எள்ளுப்பிள்ளை தம்பதியரதும் பேரனும் கனடா ஸ்காபுரோவில் வசித்து வந்தவருமாகிய* **அமரர் (செல்வன்) சண்முகரத்தினம் மோகனதாஸ் (சாம்)** *அவர்களது 41ஆம் நினைவுநாளும் நன்றிநவிலல்தினமும் இன்று (28.10.2006) சனிக்கிழமை நடைபெறவுள்ளன.*

*எங்கள் அன்புச் செல்வம் அகாலவிபத்துக்குள்ளாகி, மருத்துவமனையில் இருந்த காலத்தில் மருத்துவமனைக்கும் எமது இல்லத்துக்கும் பின்னர், அன்னாரின் மறைவின்போதும், அதன்பின் நிகழ்ந்த இரங்கல் நிகழ்ச்சியிலும் இறுதிக்கிரியைகளிலும் சமூகமளித்து, ஆறுதல் மொழிகள் கூறிய அனைத்து உள்ளங்களுக்கும் தொலைத்தொடர்பு ஊடகங்கள் மூலம் தொடர்புகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கடல் கடந்து வந்த உறவுப் பிணைப்புகளுக்கும் அன்னாரின் தொழிலக நண்பர்களுக்கும் அவருடன் அன்றாடம் அன்பு கொண்டு இனிதாக உறவாடிய நெஞ்சங்களுக்கும் மலர்வளையம் சாத்தி, மலர்மாலைகள் அணிவித்து அஞ்சலித்த மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினருக்கும் மற்றும் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டு துயரினைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் இரங்கலுரை நிகழ்த்திய அனைவருக்கும், அன்னாரின் விபத்துத் தினத்திலிருந்து இன்றுவரை பல வழிகளிலும் முன்னின்று உதவிகள் பல நல்கி உறுதுணையாக இருந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் செல்வனின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்த அனைவருக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.*

*அன்னாரின் நினைவு தினம் இன்று (28.10.2006) சனிக்கிழமை காலை இல.1240, Ellesmere Road (Midland/Ellesmere)இல் அமைந்துள்ள Atlanta Banquet Hallஇல் நடைபெறவுள்ளது. அன்னாரின் நினைவஞ்சலியில் பங்குபற்றி அஞ்சலி செலுத்துமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

150, Braymore BLVD,
Scarborough-ONT,
MIB 2N5, Canada. 416 282 6282, 647 889 1740

**தாய், தந்தை - திரு. திருமதி சண்முகரத்தினம்,**
**சகோதரன் - சுரேன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சியில் குடும்ப விவரம் பதிவு

உடுப்பிட்டி, ஒக்.28

வடமராட்சியில் இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று குடும்ப விவரங்களைப் பதிவு செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தினர் பொலிஸாருடன் இணைந்து பொதுமக்களின் விவரங்களைச் சேகரிக்கின்றனர். வீடுவீடாகச் சென்று குடும்ப விவரங்கள், வாகனங்களின் விவரங்கள் போன்றவற்றைப் பதிவு செய்கின்றனர். (202-155)

## சாவகச்சேரி நீதிமன்றில் பிணைப் பணம் மீளளிப்பு

தென்மராட்சி, ஒக்.28

சாவகச்சேரி நீதிமன்றில் முடிவுற்ற வழக்குகளின் பிணைப் பணம் மீள வழங்கப்பட்டு வருகின்றது.

பிணைப்பணத்தினை வழங்கக் கோரி விண்ணப்பித்தவர்களுக்கு இக் கொடுப்பனவு காசோலை மூலம் நீதிமன்றில் வழங்கப்பட்டு வருகின்றது.

பிணைப் பணத்திற்கு விண்ணப்பித்து இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் நீதிமன்றப் பதிவாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## தென்மராட்சியில் உரிய வேளையில் பொருள்கள் பெறமுடியாத நிலை

தென்மராட்சி, ஒக்.28

பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் இரு கிளைகளில் ஒரு முகாமையாளர் கடமையாற்றுவதால் இரு கிளைகளையும் சேர்ந்த 700ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் உரிய வேளையில் உணவுப்பொருள்களைப் பெறமுடியாத நிலையில் உள்ளன.

இக் கிளைக்கடைகள் ஒன்றுவிட்டு ஒரு நாள் திறப்பதால் பொருள்கள் பெறுவதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

தற்போது உணவுப் பொருள்கள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகள் மூலம் வழங்கப்படுகின்றன. இவ்வேளையில் இரு கிளைக் கடைகளில் ஒருவர் கடமையாற்றுவதால் இரண்டு கடைகளுக்கும் தனித்தனி முகாமையாளர்களை நியமிக்கக்கோரி உரிய அதிகாரிகளிடம் முறையிட்டும் இதுவரை பயன் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது நாட்டு நிலைமை சீராகி இயல்பு நிலை தோன்றும்வரை இரு கிளைகளுக்கும் தனித்தனி முகாமையாளரை நியமிக்குமாறு கோரியுள்ளனர்.

## வவுனியா விடுதிகளில் கட்டணம் திடீர் அதிகரிப்பு: யாழ்.திரும்பக் காத்திருப்போர் பெரும் இக்கட்டில்

யாழ்ப்பாணம்,ஒக்.28

வவுனியாவில் பயணிகள் தங்கும் விடுதிகளின் வாடகைக் கட்டணங்கள் திடீரென அதிகரித்துள்ளன. இதனால் யாழ்ப்பாணம் வருவதற்காக வவுனியாவில் காத்திருக்கும் பலர் விடுதிக் கட்டணங்களைச் செலுத்தமுடியாது இக்கட்டில் இருக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

ஏ-9 பாதை மூடப்பட்டதை அடுத்து யாழ். நகர் திரும்பமுடியாத பலர் கப்பல் சேவையை எதிர்பார்த்து வவுனியாவில் தங்கியுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் அங்குள்ள விடுதிகளிலேயே தங்கியுள்ளனர்.

இச்சந்தர்ப்பதைப் பயன்படுத்தி விடுதிகளின் வாடகைக் கட்டணங்களை அதன் உரிமையாளர்கள் அதிகரித்துள்ளனர். பொது நிறுவனமொன்று நடத்திவரும் விடுதியின் வாடகைக் கட்டணமும் அதிகரித்துள்ளது.

அதிகரித்த வாடகைக் கட்டணங்களைச் செலுத்த முடியாதவர்கள் அங்கிருந்து வெளியேறுமாறு மிரட்டப்படுகின்றனர் என்றும் -

இதனால் பலர் பெரும் இக்கட்டின் மத்தியில் அங்கு தங்கியிருக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (202-182)

## நவாலியில் சுகாதாரக் கேடான பண்ணையை அகற்றப் பணிப்பு

நவாலி,ஒக்.28

நவாலி சின்னப்பா வீதியில் மக்கள் குடியிருப்புக்கு நடுவில் சுகாதாரமற்ற முறையில் அமைக்கப்பட்டிருந்த பெரிய கோழிப்பண்ணையை உடன் அகற்றுமாறு ஆனைக்கோட்டை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பணித்துள்ளார்.

இப்பண்ணை சுகாதாரப் பிரிவினரின் அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குடியிருப்புப் பகுதியில் பண்ணை அமைக்கப்பட்டுள்ளதன் காரணமாக அப்பகுதியில் மக்கள் குடியிருக்க முடியாத அளவிற்குத் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாகத் தொற்று நோய்கள் பரவும் அபாய நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இவற்றைக் கருத்திற்கொண்ட அப்பகுதி மக்கள் இவ்விடயம் தொடர்பாக சுகாதாரப் பிரிவினருக்கு முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து பண்ணையை அகற்றுமாறும்- தவறும் பட்சத்தில் உரியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் ஆனைக்கோட்டை சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார். (203-100)



இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அண்மையில் அசம்பாவித சம்பவத்தால் உயிரிழந்த தனது வாடிக்கையாளர் பஞ்சாட்சரம் கிருபாகரனுக்கு காப்புறுதிக் கொடுப்பனவாக 53 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

கொடுப்பனவுக்கான காசோலையை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய முகாமையாளர் திருமதி ஆர்.எஸ். அரியரத்தினம், இறந்தவரின் உறவினரிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். படத்தில் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக உத்தியோகத்தர் அ.சுபேஷன், விற்பனை முகாமையாளர் பா.சத்தியன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிப்போர் குறைவு

நெல்லியடி, ஒக்.28

ஆலயங்களில் கந்தசஷ்டி விரதத்தை இம்முறை அனுஷ்டித்தவர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுவதை அவதானிக்க முடிந்தது.

அண்மைக் காலமாக நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாகவே இப் பகுதியில் மிகக் குறைவான பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தந்ததாகவும் -

பெரும்பாலானோர் தங்கள் வீடுகளில் தங்கியிருந்தே விரதத்தை அனுஷ்டித்ததாகவும் கூறப்படுகின்றது. (202-115)

## மகாஜன ஸ்தாபகர் நினைவுதினம் இன்று

யாழ்ப்பாணம், ஒக்.28

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் ஸ்தாபகரும் முன்னாள் அதிபருமான ஜெயரத்தினத்தின் நினைவுதினமும் கனிஸ்ட பிரிவின் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வலி.வடக்கு பிரதேச செயலர் சுப்பிரமணியம் முரளீதரனும், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பளை கோட்டக் கல்விப்பணிப்பாளர் ச.கைலாசநாதன், கல்லூரியின் முன்னாள் அதிபர் பொ. சுந்தரலிங்கம் ஆகியோரும், கௌரவ விருந்தினராகக் கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் கலந்து கொள்வர்.

நிகழ்வின் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை விரிவுரையாளர் திருமதி சாந்தரூபி புவனேந்திரராசா நிகழ்த்துவார். (202)

## வடமராட்சியில் அதிக விலையில் தேநீர் விற்பனை என முறைப்பாடு

உடுப்பிட்டி, ஒக்.28

வடமராட்சி பிரதேசத்திலுள்ள தேநீர் கடைகளில் தொடர்ந்தும் அதிகரித்த விலையிலேயே தேநீர் விற்பனை செய்யப்படுகின்றது என மக்கள் கூறுகின்றனர்.

இப்பகுதியில் பால் தேநீர் 15 ரூபாவிற்கும், தேநீர் 10 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுகின்றன. பலகாரங்களும் விலை அதிகமாகவே விற்கப்படுகின்றன.

அரச அதிபரின் பணிப்பின் பேரில் உணவகங்களுக்கு நியாய விலையில் பொருள்கள் வழங்கப்பட்ட போதும் தொடர்ந்தும் பலகாரங்களையும் தேநீரையும் அதிக விலையில் விற்பது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது எனக் கூறப்படுகின்றது. (202-155)

**வடமராட்சிப் பகுதியில்**

## உயர் பாதுகாப்பு வலயத்தில் ஆலயங்களில் பூசை இல்லை

### இணையத்தின் அறிக்கையில் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.28

கடந்த ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி தொடக்கம் குடாநாட்டில் நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையால் பருத்தித்துறை உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள 3 கோயில்களில் பூசைகள் நடைபெறுவதில்லை.

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் விடுத்துள்ள செப்ரெம்பர், ஒக்ரோபர் மாத நிலவர அறிக்கையிலேயே இந்த விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பருத்தித்துறை உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள கொட்டடி அம்மன் கோயில்(சாமுண்டீஸ்வரி), கொட்டடிப் பிள்ளையார் கோயில் ஆகிய இரு கோயில்களிலும் பூசைகள் நடைபெறுவதில்லை.

ஆலடிப் பிள்ளையார் கோயிலில் பூசை வழிபாடுகள் இடம்பெறாததுடன் கோயிலும் மூடப்பட்டுள்து.

வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்கான பாதைகள் தடை செய்யப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதால் இம்மாத ஆரம்பத்தில் நடைபெற்ற ஆலய தேர், தீர்த்தத் திருவிழாக்களில் வழமையை விட 10 சதவீதமான பக்தர்களே கலந்துகொண்டனர் - என்றுள்ளது. (202-88)

## சண்டிலிப்பாய்ப் பகுதிக்கு நிரந்தரமாக கால்நடை வைத்தியர் வேண்டும்

### பிரதேச விவசாயிகள் வலியுறுத்து

வலி.தென்மேற்கு,ஒக்.28

சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனைக்கு நிரந்தர கால்நடை வைத்திய அதிகாரி ஒருவரை நியமனம் செய்து தருமாறு கால்நடை வளர்ப்போரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இப்பணிமனையில் கால்நடை வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் திருமதி ச.சுப்பிரமணியம் கடந்த ஏப்ரல் மாதம் கோண்டாவிலில் இயங்கும் கால்நடை வைத்திய நிலையத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

இதன் காரணமாக இவரே சண்டிலிப்பாய் வைத்தியசாலையில் பதில் பொறுப்பதிகாரியாகவும் கடமை புரிகின்றார்.

இந்நிலையில் வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவிற்கான கால்நடை வைத்தியசாலையாக சண்டிலிப்பாய் கால் நடை வைத்திய அதிகாரி பணிமனை இயங்குவதால் இங்கு ஒரு நிரந்தர கால்நடை வைத்திய அதிகாரியை நியமனம் செய்வது அவசியம் என்று விவசாயிகள் கேட்டுள்ளனர்.

நிரந்தர கால்நடை வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்க விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்று மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தினர், மாதகல் விவசாயிகள் சம்மேளனத்தினர் உட்பட அப்பகுதியைச் சேர்ந்த கால்நடைவளர்ப்பில் ஈடுபடும் அனைவரும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள யாழ். மாவட்ட [illegible] கடிதம் மூலம் கோ[illegible] (203-135)

## காலத்தின் தேவையறிந்து குறைதீர்க்கும் குரக்கன் செய்கை

யாழ்.மாவட்டத்தில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக எமது உணவுத் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு அதிகளவு நிலப்பரப்பில் குரக்கன் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளல் அவசியமாகின்றது. கடந்த காலங்களில் சராசரியாக 45 ஏக்கர் விஸ்தீரணத்தில் மானாவாரியாக மழையுடன் குரக்கன் பயிர்ச்செய்கை பண்ணப்பட்டது.

எனினும் 1989/1990, 1990/1991, 1999/2000, 2000/2001 ஆண்டுகளில் நிலவிய போர்ச்சூழல் காலத்தில் குரக்கன் முறையே 32 ஏக்கர், 45 ஏக்கர், 9.3 ஏக்கர், 27 ஏக்கரிலும் செய்கை பண்ணப்பட்டது.

சரியான பயிர்ச்செய்கை முறைமையைக் கைக்கொள்வதன் மூலம் அதிகரித்த உற்பத்தியைப் பெற்றுக்கொள்ளலாம். எனவே, தற்போது காலபோக மழை ஆரம்பித்திருப்பதால் இது குரக்கனை மானாவாரியாக விதைப்பதற்குப் பொருத்தமான காலமாகும்.

குரக்கனை மானாவாரியாகப் பயிர் செய்வதாயினும் வீச்சு விதைப்பாக மேற்கொள்ளாது நாற்று மேடையில் நாற்றை ஸ்தாபித்து பின்னர் 18-21 நாளில் மழையுடன் நடுகையை மேற்கொள்ளும்போது களைகளினால் ஏற்படும் இழப்புக்களைக் குறைக்கலாம்.

குரக்கன் மூன்று மாதகாலப் பயிராகையால் பெரும்போகத்தின் ஆரம்ப மழையுடன் நாற்று மேடைக்கான நிலத்தைப் பண்படுத்தி நவம்பர் மாதத்தின் முதற்கிழமையில் 1 மீற்றர் அகலமும் 10 - 15 சதம மீற்றர் உயரமும் கொண்ட நாற்று மேடைகளை அமைத்து விதைகளை விதைக்கலாம்

களை கட்டல், நீரூற்றல், உரமிடுதல் போன்ற பயிர்ச்செய்கைகளை இலகுவாக மேற்கொள்வதற்கு ஒவ்வொரு மேடையையும் சுற்றி 30-45 சதம மீற்றர் இடைவெளியில் கான்கள் அமைப்பது அவசியம் ஆகும்.

இவ்வாறு நாற்றுமேடை அமைத்து விதைத்த குரக்கன் நாற்றினை 18-21 நாள்களில் 15 சதம மீற்றர் இடைவெளியில் உள்ள வரிசைகளில் 10-15 சதமமீற்றர் இடைவெளியில் நாற்றுக்களைப் பிடுங்கி நடலாம்.

குறிப்பாக இந்த நாற்றுக்கள் இலகுவாக நிலைப்படுத்தப்படுவதற்கு மழையுடன் நாற்றினை நடுகை செய்தல் சிறந்தது. எனவே மழை குறைவாகக் காணப்பட்டால் 4-5 நாள்களுக்கு ஒரு தடவை நீர் பாய்ச்ச வேண்டும் அடிக்கட்டுப் பசளையாக ஒரு பரப்பிற்கு யூரியா 1.25 கிலோ அல்லது அமோனியம் சல்பேற்று 2.5 கிலோ, மும்பை சுப்பர் பொசுச்பேற்று 1.25 கிலோ, மியூரியேற்றுப் பொட்டாசு 1.25 கிலோ இடவேண்டும்.

நவம்பர் மாத முதல் வாரத்தில் குரக்கன் நாற்றுமேடை இடுவதன் மூலம் பனி ஆரம்பிப்பதற்கு முன்னர் டிசெம்பர் மாத இறுதியில் பயிர் பூக்க ஆரம்பிக்கும். இதன் மூலம் குரக்கனைத் தாக்கும் எரிவந்த நோயில் இருந்து பயிரைப் பாதுகாக்க முடியும். குரக்கன் நட்டு 45 நாள்கள் வரை களைகள் இல்லாது பாதுகாப்பதற்காக நட்டு 15-20 நாள்களின் பின்பு களைகள் அகற்றப்படவேண்டும். எரிவந்த நோயில் இருந்து பயிரைக் காப்பாற்றுவதற்கு நெருக்கமாக நடுதல், அதிகளவு நைதரசன் பசளையிடல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். தேவைப்பட்டால் சிபார்சு செய்யப்பட்ட பங்கசு நாசினி பெனோமில் அல்லது எடிபென்பொஸ் பிரயோகிக்கலாம்.

சிறப்பான பராமரிப்பின் கீழ் ஒரு பரப்பிற்கு (250 சதுர மீற்றர்) 60-70 கிலோ குரக்கனை விளைவாகப் பெறலாம்.

மேலதிக தகவலிற்கு அவ்வப் பகுதி விவசாயப் போதனாசிரியரை நாடவும்.

ம.யோகநாதன்,
விவசாயப் போதனாசிரியர்,
பிரதி விவசாயப் பணிப்பாளர்(விரி) அலுவலகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவுப் பொருள்கள் விநியோகம்

செயல்திறன் அரங்க இயக்கத்தினால் உலக உணவுத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட உளசமூக செயற்பாடு மற்றும் பொருளாதார மேம்பாடுத் திட்டத்தின் பயிற்சிகளில் கலந்து கொண்டவர்களுக்கான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை, 125 பேருக்கு உள்நாட்டு மூலப் பொருள்களைப் பயன்படுத்தி உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடல் தொடர்பாக ஒருவார பயிற்சிகள் வழங்கப்பட்டன. (203-68)


## உடனடி வேலை வாய்ப்பு

கட்டார், டுபாய்

துப்பரவுத் தொழிலாளர்கள் - 700 பேர்
(Cleaning Laborer)
(விமான நிலையம், சுப்பமார்க்கட், ஆஸ்பத்திரி, பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில்)

★ முன்னனுபவம், அனுபவம் தேவையில்லை
★ ஒரு மாதத்தில் பயணம்

### ஐரோப்பிய நாடுகளுக்கான விசா ஒழுங்குகள்

பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், லண்டன், இத்தாலி நாடுகளுக்கு Sponsor மூலம் செல்வதற்குரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

**RAINBOW TRAVELS**
32, 1/2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 222 3237
(ராஜா கிறீம் கவுஸுக்கு அருகில் அபிநயா நகை மாடத்திற்கு மேல்மாடியில்)
(54671)


## சைக்கிள் ரயர், ரியூப் ஆயிரம் ரூபாவுக்கு மேல்

யாழ்.மாவட்டத்தில் சைக்கிள்களுக்கான ரயர், ரியூப்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தட்டுப்பாட்டைப் பயன்படுத்தி கடைக்காரர்கள் சைக்கிள் ரயர், ரியூப்களின் விலையை அதிகரித்துள்ளனர்.

தற்போது ரயர், ரியூப் இரண்டும் சேர்த்து 800 ரூபா முதல் ஆயிரம் ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இதேவேளை ரியூப் காற்றுப் போனால் அதை ஒட்டுவதற்கான கட்டணத்தையும் சைக்கிள் கடைக்காரர்கள் மிகவும் அதிகரித்துள்ளனர். (1-135)


**DIPLOMA IN COMPUTER HARDWARE**
GROUP CLASSES
SPEED BATCH ONLY 20 Hours
Only For 10 Students
○ Start on 28.10.2006
○ Days:- Sat, Sun
○ Time:- 9.30 a.m
Fee:2500/-
முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.
**C.B Computer Academy**
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

### ஞானக்குழந்தை கல்விக் கழகம்
19, சிவன் வீதி, திருநெல்வேலி.
தரம் 6 தொடக்கம் O/L வரை வகுப்புகள்
யாழ். நகரின் பிரபல கல்லூரி ஆசிரியர்களினால் 28.10.2006 சனிக்கிழமை பி.ப.2.மணிக்கு ஆரம்பமாகும்.
(54669) இயக்குனர்.

### விற்பனைக்கு
EN XXXX தொடரிலக்கமுடைய மொறிஸ் மைனர் கார் (1000 மொடலுக்கு மாற்றிலும் மாற்றியமைக்கப்பட்டது.) மற்றும் யமஹா எலக்ரிக் 125 மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு.
(54676) தொடர்பு தொ.பே.: 6415

### EVER SHINE EDUCATION CENTRE
*123, BROWN ROAD, JAFFNA.*
தரம் 6 தொடக்கம் A/L வரை ஆங்கில மொழி மூலமான வகுப்புகள் *(ENGLISH MEDIUM)*
தகவல் தொழில்நுட்பம் — திரு.R.குமரன் B.Sc
தரம் 9, 10, 11 மாணவர்களுக்கு நடைபெறுகின்றது.
(546665) இயக்குனர்.


## மரண அறிவித்தல்

### துரைசிங்கம் செல்வராணி

தொல்புரம், வழக்கம்பரையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் செல்வராணி அவர்கள் 27.10.2006 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரைசிங்கத்தின் அன்பு மனைவியும், ரகுவின் (மக்கள் வங்கி, வட பிராந்திய முகாமையாளர்) அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தொல்புரம். (54680) து.ரகு (மகன்).

## ஈரவிழிகளுடன் 43 நாள்கள்



அமரர்
**நா.லிங்கநாதன்**
(இ.மி.ச. சுன்னாகம்,
உப பணிமனை)

கடமையே தன் கண்ணானவன்
கண்ணியத்தின் காவலனும் அவனே
குடும்பத்தின் நல்விளக்கானான்
உற்றார்க்கு இனிய தோழனுமானான்

இமைப் பொழுதில் எமைப் பிரிந்தவன்
ஈரவிழிகளில் நிதம் கண்ணீர்த் துளிகள்
என்றும் காயாது விழிநீர் ஈரம்
ஆறாது என்றும் நெஞ்சத் தீ

நண்பனே எம் உடன்பிறப்பே
ஒருமுறை இம்மண்ணில் தோன்றுவாய்
எம்முடன் அளவளாவி மகிழ்ந்திடுவாய்
அந்நாளுக்காய் நாம் காத்திருப்போம்

நாள்கள் நாற்பத்தி மூன்று கடந்தாலும்
என்றும் உன் நினைவுகள் எம் நெஞ்சத்தில்
மாறாது மறையாது நித்தம் வாழும்
லிங்கத்தின் நாதனே உன் புகழ் வாழ்க.

அங்கத்தவர்கள், இலங்கை மின்சாரசபை வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கம்.
(#-51229)

## 11ஆம் ஆண்டில் நீங்காத நினைவுகள்



| குவலம் | | குகமயம் |
|---|---|---|
| 29 | | 29 |
| * | | * |
| 06 | | 10 |
| * | | * |
| 1929 | | 1995 |

ஸ்ரீமான் **ஷண்முகரத்நம் குமரேசன்**
திதி: (கந்த) ஷஷ்டி

சேந்தன் திருவடிகள் மன்னிய தினமதனில்
காந்தக் கனவுகளால் காலமெல்லாம் நினைவுகளாய்
மாந்தும் மரபுகளும் மாண்பினிய பெருமைகளும்
ஏந்தும் உள்ளங்கள் ஒருபோதும் மறவாதே
ஓம் சாந்தி!

மணியகாரன் ஒழுங்கை,
கொக்குவில். மனைவி, பிள்ளைகள்.
(54667)

## ஓராண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 11 | | 23 |
| 05 | | 10 |
| 1928 | | 2005 |

**அமரர் பொன்னர் முருகேசு**
(முன்னாள் உரிமையாளர், ஆனந்தபவான் போசன சாலை)
திதி: ஷஷ்டி (28.10.2006)

ஆண்டு ஒன்று போனதையா - நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்து
ஆறவில்லை எம் துயரம்
என்றும் உங்கள் நினைவோடு

கரம்பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை. (54681) மு.புஸ்பவதி (மனைவி).

## 19 ஆம் ஆண்டு நினைவு கூரல்



| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 30 | | 28 |
| 12 | | 10 |
| 1930 | | 1987 |

**அமரர் அ.செ.அந்தோனிப்பிள்ளை**
(இளைப்பாறிய அரசாங்க எழுதுநர், வனத் திணைக்களம்)

ஆண்டவனின் வருகையில்
ஆதவன் போல் பிரகாசித்து எழும்புவீரென
ஆவலுடன் எதிர்பார்க்கும்.

5ஆம் ஒழுங்கை,
மானிப்பாய் வீதி, உடுவில். அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(54669)


**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

### ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Micro media Flash MX
Course Fee :2000/=

**ஒரே நாளில் ஆரம்பம்:- 30/10/2006 - 08.30 am**

ஏனைய அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் 27/10/2006, 28/10/2006, 29/10/2006, 01/11/2006 ஆகிய திகதிகளில் ஆரம்பமாகின்றன.


## ஆன்மீக நிகழ்வும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஒக்.28

வட பிராந்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவன இளைஞர் சபை நடத்திய பல்வேறு போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவமும் ஆன்மீக மாத இறுதி நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இளைஞர் சபையின் தலைவர் பூ.ரஜீத்தனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், சபையால் நடத்தப்பட்ட கவிதை, ஓவியம்,ஓவிய விமர்சனம், தனி நடிப்பு, சதுரங்கம் ஆகிய போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பும் பங்குபற்றிய சகல மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும் நடைபெறவுள்ளன. (202)

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்



| மண்ணில் முத்து | | விண்ணில் சொத்து |
|---|---|---|
| 11 | | 03 |
| 01 | | 11 |
| 1939 | | 2000 |

**அமரர் சின்னையா முத்துக்கிருஷ்ணர்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
திதி: ஸப்தமி (28.10.2006)

அறிவுப் பெட்டகமே! ஆற்றலின் சிகரமே!
வீரத்தின் இமயமே! புகழ்பூத்த ஆசானே!
கண்டோர் மதிக்கும் தலைவனே!
இன்னும் நின்புகழ் பேசுது இவ்வுலகம்!
ஆண்டாறு ஓடி மறைந்தாலும்
ஆறாது உம் நினைவு எம் மனதைவிட்டு!
அடைக சாந்தி!

கணக்கர் வளவு, கந்தரோடை,
சுன்னாகம். (54668) - குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

## அன்றாடப் பிரச்சினை குறித்து பேசாமல் முன்நகர்வு இல்லை

வரலாற்றுத் திருப்புமுனையில் நிற்கும் இலங்கைத் தீவின் தலை விதியைத் தீர்மானிக்கும் மிக முக்கியமான பேச்சுகள் ஜெனிவா நகரில் இன்று ஆரம்பமாகின்றன.

பேச்சுக்காக அரசு, விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினரும் ஜெனிவாவில் குழுமிவிட்டனர்.

நடக்கப் போவது என்னவோ அமைதிப் பேச்சு என்றாலும், தரப்புகள் இரண்டும் தமக்கிடையே உச்ச விரோதப் போக்குடனும், பகையுறவுடனும் பேச்சு மேசையில் எதிர்த் தரப்பைச் சந்திக்க வரிந்து கட்டிக் கொண்டு தயாராக இருப்பதை உணர முடிகின்றது.

நம்பிக்கையோடு பேச்சுகளுக்குச் செல்லுகின்றோம் என்று அரசுத் தரப்பில் வெளிப்பேச்சுக்கு - வெளிப்பூச்சுக்கு - கூறப்பட்டாலும் யதார்த்த நிலைமை வெளியே தெரியாததல்ல.

விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரை பெரிய நம்பிக்கையோடோ அல்லது எதிர்பார்ப்புடனோ பேச்சு மேசைக்குத் தாங்கள் வரவில்லை என்ற உண்மையை வெளிப்படையாகவே - பட்டவர்த்தனமாகவே - அவர்கள் தெரிவித்து விட்டனர். புலிகளின் பேச்சுக் குழுத் தலைவர் சு.ப. தமிழ்ச்செல்வன், கிளிநொச்சியை விட்டுப் புறப்பட முன்னரே இதை அப்பட்டமாகக் கூறி விட்டார். ஜெனிவாவில் வந்து இறங்கிய பின்னரும் அதை உறுதிப்படுத்தியுள்ளார்.

இன்றைய பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் என்னவென்பது இந்தப் பத்தி எழுதப்படும் சமயத்தில் முடிவாகவில்லை. இலங்கை நேரப்படி நேற்று மாலைக்குப் பின்னரே அது முடிவு செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் தென்பட்டன.

ஆனால், இன்றைய பேச்சுகளுக்கான உத்தேச நிகழ்ச்சி நிரல் குறித்து இலங்கை அரசின் சார்பிலும், பேச்சுக் குழு சார்பிலும் வெளியான கருத்துகள் இந்தப் பேச்சுகளைப் பயனுள்ள வகையில் முன்நகர்த்துவதற்கான தெளிவோ, திடசித்தமோ, உறுதியோ, தந்திரமோ அரசுத் தரப்பிடம் இல்லை என்பதைத் தெளிவுபடுத்துவனவாக இருக்கின்றன.

ஈழத் தமிழர் தாயகத்தின் பெரும் பிரதேசத்தில் மனிதப் பேரவலம் கட்டவிழ்ந்து, மக்கள் வாழ்வுக்கும், சாவுக்கும் இடையில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு அல்லலுறும் நிலைமை மோசமடைந்திருக்கின்றது. போக்குவரத்துத் தடையும், பொருளாதார நெருக்கடியும், கொலை வெறித் தாண்டவமும் உச்சத்தில். யுத்த நிறுத்தத்துக்கு அடிப்படையான புரிந்துணர்வு ஒப்பந்தம் செல்லாக் காசாகும் கையறு நிலைமை. கனலும் துப்பாக்கிகளும், பீரங்கிகளும், பல் குழல் ஏவுகணைகளும், மோட்டார் ஷெல்களும் தமிழர் தாயகத்தைத் தினசரி இரத்தத்தில் தோய்த்து நிற்கின்றன.

தீவிரமடைந்திருக்கும் யுத்தவெறிப் போக்கைத் தணித்து - மக்களின் உயிர்வாழ்க்கைப் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட அவசர, அவசிய மனிதாபிமானச் சிக்கல்களுக்குத் தீர்வு கண்டு - பேச்சுக்கான இயல்பு நிலைமையை ஏற்படுத்தி - வழமைச் சூழலை உருவாக்கிய பின்னரே அடிப்படை விடயங்கள் குறித்துப் பேசவும், ஆராயவும் முடியும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் இந்தக் கணமோ அல்லது அடுத்த கணமோ செயலிழந்து போகும் ஆபத்தான களநிலைமை நிலவுகையில், அதைச் சீர் செய்வதற்கான அடிப்படை ஏற்பாடுகளைக் கவனிக்காமல் -

ஈழத் தமிழர்களின் பெரும் பகுதியினர் - பல லட்சக் கணக்கானோர் - அடுத்த வேளை வாழ்வுக்கு ஆதாரமற்ற நிலையில், பேராபத்தில் அல்லாடிக் கொண்டிருக்கையில் -

அது குறித்துக் கவனிக்காமல், அந்தப் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காண்பது குறித்து நடவடிக்கை எடுக்காமல் - வேறு பல அம்சங்கள் அடங்கிய நிகழ்ச்சி நிரல் நீட்டோலை குறித்துப் புலிகள் கவனம் செலுத்துவர் என எதிர்பார்ப்பது அபத்தம்.

இன்றும் நாளையும் நடக்கும் அமைதிப் பேச்சுகளின்போது -

ஜனநாயகத்தைப் பேணுதல், இதர அரசியல் கட்சிகளின் அரசியல் செய்யும் உரிமை, மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், சிறுவர்களைப் படையில் சேர்க்காதிருத்தல், வடக்கு - கிழக்கு துரித அபிவிருத்தி, அதிகாரப் பகிர்வு மூலம் அரசியல் தீர்வு - பன்முகத் தன்மை.... - இவை எல்லாம் குறித்து ஆராயப்படும் என அரசுத் தரப்பில் வெளியிடப்பட்டிருக்கும் கருத்துகள யதார்த்தத்தைப் புரியாமல் வெளியிடப்படும் அரசியல் மதியீனம் என்றே கருத வேண்டியிருக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில், புலிகளின் பேச்சுக் குழுத் தலைவரும், அரசியல்துறைப் பொறுப்பாளருமான சு.ப. தமிழ்ச்செல்வன், ஜெனி வாவில் வந்திறங்கியதும் விமான நிலையத்தில் வைத்து - அங்கு தங்களை வரவேற்ற புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் - உரையாற்றுகையில் கூறிய ஒரு விடயம் இப்போது கவனிக்கத்தக்கது.

*''சர்வதேசம் விடுத்த வேண்டுகோளை ஏற்று இங்கு (ஜெனிவா) வந்துள்ளோம். எமது மக்களின் அவலங்களுக்குத் தீர்வு எட்டப்படாத நிலையில் எமது தலைவிதியை நாமே தீர்மானிக்கின்ற நிலைமையை உருவாக்கிக் கொள்வோம்.''* - என்று மிகத் தெளிவாகவும், உறுதியாகவும் அவர் கூறியிருக் கின்றார்.

ஆக, தமிழ் மக்களின் அவல வாழ்வைச் சீர் செய்வதற்கான விவகாரங்களே இப்போது விரைந்து கவனிக்கப்பட வேண்டும். அதைக் கவனிப்பதற்கு - செய்வதற்கு - இந்தப் பேச்சுகளில் வாய்ப்புக் கிட்டா விட்டால் தமிழர்களின் தலைவிதியை, அவர்களின் அரசியல் தகைமையைத் தமிழர்களே தீர்மானிக்கும் நிலையை உருவாக்கும் வகையில் புலிகளின் செயற்பாடு அமையும் எனப் புலிகளின் பேச்சுக் குழுத் தலைவர் தெளிவுபடுத்தி விட்டார்.

இந்தக் கருத்துக்கு இடையே - வசனங்களுக்கு நடுவில் - தொக்கி நிற்கும் அடிப்படைக் கருத்தியல் என்னவென்பதை, அரசுத் தரப்பு உண்மையில் புரிந்து கொள்ளுமானால் இன்றும் நாளையும் பேச்சுக்கான விடயமாக அமைய வேண்டியவை எவை என்பதை அது தானாகவே சரியாக உணர்ந்து கொள்ளும்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, மக்களின் அன்றாட மனிதாபிமான நெருக்கடிகளைத் தீர்த்து, பேரவலத்திலிருந்து இயல்புநிலைக்கேனும் அவர்கள் திரும்ப வாய்ப்பளிப்பது தான் இப்போது அவசரமாகச் செய்யப்பட வேண்டியது. அது பற்றித்தான் முதலில் பேசப்பட வேண்டும். அதற்குப் பின்னர் தான் மற்ற விவகாரங்கள் குறித்தெல்லாம் ஆராயலாம்.

இந்த விடயத்தைப் புரிந்து கொள்ளாமல் - அல்லது புரிந்து கொள்ள முயலாமல் - அல்லது புரிந்து கொள்ள விரும்பாமல் - பேச்சை வேறு வழியில் திசை திருப்ப அரசுத் தரப்பு முயலுமானால் அமைதிப் பேச்ச முன்நகராமல் தேங்கிப் போவது தவிர்க்க முடியாததாகி விடும்.

இந்தப் பேச்சு முன்நகர்வதும், நகராததும் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் குறித்த முடிவில்தான் தங்கியுள்ளது.

# ஆள்கடத்தல் குறித்த முறைப்பாடுகள் தொடர்ந்தும் கிடைத்து வருகின்றன

## ஒக்ரோபர் அறிக்கையில் ஐ.சி.ஆர்.சி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஒக்.28

இனங்காணாத நபர்களால் தமது உறவினர்கள் கடத்தப்படுவது குறித்து பொதுமக்கள் தொடர்ந்தும் தங்களிடம் முறைப்பாடு தெரிவிக்கிறார்கள் என்று செஞ்சிலுவைச் சர்வ தேசக் குழு தனது ஒக்ரோபர் மாத அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஒக்ரோபர் 25ஆம் திகதியிடப்பட்ட மேற்படி அறிக்கையிலேயே அக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதிலுமிருந்து இவ்வாறான முறைப்பாடுகள் வந்த வண்ணம் இருக்கின்றன. கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் அவ்வாறான ஒன்பது முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள காலப் பகுதியில் மட்டும் மட்டக்களப்பிலும் கிளிநொச்சியிலுமுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு காரியாலயம் 90 சடலங்களை எடுத்துச் செல்ல உதவியுள்ளது என்று தெரிவித்துள்ள குழுவின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்கள் வருமாறு:

கடந்த இரண்டு வாரங்களில் ஓமந்தை உயிலங்குளம் பகுதிகளில் இருந்து 7,010 சிவிலியன்களின் பயணங்களுக்கு நடுநிலை அனுசரணையாளர்களாக ஐ.சி.ஆர்.சி. உதவி வழங்கியுள்ளது.

### பரஸ்பர குண்டுமாரி

கிளாலி, முகமாலை, நாகர்கோயில் பகுதிகளில் பரஸ்பரம் குண்டுத் தாக்குதல்கள் நடப்பது தொடர்ந்து வருகின்றன. ஏ-9 பாதையூடாக யாழ்ப்பாணம், வவுனியா, முகமாலை பகுதிகளுக்கான பயணம் இன்னமும் சாத்தியமற்றதாகவே இருந்துவருகின்றது. கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதியில் விட்டு விட்டு மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இரண்டு அரச கப்பல்களில் அத்தியாசியப் பொருள்கள் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தன. வவுனியாவில் தவித்துக் கொண்டிருந்த யாழ்ப்பாண மக்களை இரண்டு அரச கப்பல்கள் கொண்டு வந்து சேர்த்தன. இதற்கு மேலாக ஐ.சி. ஆர்.சி. கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையிலான ஒரு விமான சேவையையும் மேற்கொண்டது.

### நோயாளிகள் கொழும்பு செல்ல உதவி

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலிருந்து மோசமாக சுகவீனமுற்றிருந்த ஆறு நோயாளிகளை ஒரு டாக்டரின் அனுசரணையுடன் கொழும்புக்கு ஐ.சி.ஆர்.சி. விமான சேவையில் எடுத்து செல்லப்பட்டார்கள்.

கொழும்பில் ஆய்வுட்குட்படுத்துவதற்கான நோய் மாதிரி பொருள்களையும் ஐ.சி.ஆர்.சி விமானம் மூலம் எடுத்துச் சென்று உதவியுள்ளது.

இவ்வாறு அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(ப)

## நிபந்தனையின்றி உடனடியாக ஏ-9 பாதை திறக்கப்படவேண்டும்

### இரு தரப்பினரிடமும் கோருகின்றது நீதி, சமாதான ஆணையம்

யாழ்ப்பாணம், ஒக்.28

பாரிய மனித அவலத்துக்கு முகம் கொடுத்து வரும் யாழ். குடாநாட்டு மக்களை விடுவிப்பதற்கு நிபந்தனையின்றி உடனடியாக ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்பட வேண்டும்.

யாழ். மறைமாவட்ட நீதி, சமாதான ஆணையம் ஜெனிவா பேச்சில் கலந்து கொள்ளும் இருதரப்பினரையும் மேற்கண்டவாறு கோரியுள்ளது.

இரு தரப்பினருக்கும் அனுப்பியுள்ள அவசர வேண்டுகோளில் ஆணையம் மேலும் வலியுறுத்தியுள்ளது:

இந்நாட்டில் இடம் பெறும் வன்செயல் அனைத்தும் உடனடியாக முடிவிற்குக் கொண்டுவரப்படவேண்டும். இச் சமாதான முன்னெடுப்பை தமது நலனிற்காக குழப்பமுனையும் அனைத்துக் குழுக்களையும் அனுமதிக்காதிருத்தல்.

பாரிய மனித அவலத்திற்கு முகம் கொடுத்துவரும் யாழ். குடாநாட்டு மக்களை விடுவிக்க நிபந்தனையின்றி உடனடியாக ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்படுதல்.

போர் நிறுத்த உடன்பாட்டு ஒப்பந்தத்தின் உள்ளீடு மிக இறுக்கமாக பின்பற்றப்படவும், இது எதிர்கால சமாதான பேச்சுவார்த்தைக்கு உறுதியான அடித்தளமாக அமையவேண்டும்.

ஒருவர் ஒருவருக்கு நல்லெண்ண சமிக்ஞைகளை வெளிப்படுத்தி ஆழமான நல்லிணக்கம், ஒப்புரவை உருவாக்கல்.

நாலு வருட பேச்சுவார்த்தை நகர்வு தமிழர் மேலும் ஏமாற்றப்பட்டு துன்பியலின் உச்சவிலை கொடுத்த காலம். காலம் தாழ்த்தாது உடனடியாக தீர்வுகள் எட்டப் பட்டு மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்ப ஆவன செய்யப்படவேண்டும்.

(அ-1)

## கல்விச் சீர்திருத்தம் குறித்து விளக்கவுரை

யாழ்ப்பாணம், ஒக்.28

தேசிய கல்வி நிறுவகத்தின் தமிழ்த் துறைப் பணிப்பாளர் கு.நவரத்தினம் தரம் 6,10 வகுப்புகளுக்கான புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக விளக்கவுரை வழங்கவுள்ளார்.

இவ் விளக்கவுரை இன்று காலை 9 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறும்.

சகல வலயங்களின் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர்கள் இந்த நிகழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (அ-1)

### இன்று நடைபெறவிருந்த

## தபாலதிபர் போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டதாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.28

நாடு முழுவதும் இன்று நடைபெற இருந்த தபாலதிபர்கள் பதவிக்கு ஆள் சேர்க்கும் போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் உட்பட சகல மாவட்டங்களிலும் இந்தப் பரீட்சையை இன்று நடத்த பரீட்சைத் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்தது.

சில பிரதேங்களுக்கு வினாத்தாள்கள் சென்றடைவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இப்பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது என்றும்-

பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும்- பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-1)

## கட்டுடை கிளையை உடைத்து உணவுப் பொருள்கள் திருட்டு

### கைதான மூவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஒக்.28

மானிப்பாய், கட்டுடையில் உள்ள ப.நோ.கூ.சங்கக் கிளையை உடைத்து அத்தியாவசியப் பொருள்களை திருடியதாகச் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட மூவரை விளக்கமறியலில் வைக்கு மாறு மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் இரவு இக்கிளை உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்த படையினர் வீடுவீடாகத் தேடுதல் நடத்தினர்.

திருடப்பட்ட பொருள்களை மீட்ட படையினர் மூவரைக் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் அவர்களை மல்லாகம் நீதிவான் முன் ஆஜர் செய்தனர். மூவரையும் விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## ஐந்தாம் கட்ட உணவு விநியோகம் யாழ். ப.நோ.கூ.சங்கத்தில் நேற்று ஆரம்பம்

நல்லூர், ஒக்.28

யாழ். ப.நோ.கூ. சங்கக் கிளைகளில் ஐந்தாம் கட்ட உணவுப் பொருள் விநியோகம் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை இந்த விநியோகத்தை ஆரம்பிக்குமாறு யாழ். அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்திருந்தார்.

ஹர்த்தால் காரணமாகவும், நானாவிதப் பொருள்களின் விநியோகம் மேற்கொள்ளப்பட்டதாலு[illegible], உணவுப்பொருள் விநியோகம் நடைபெறவில்லை.

நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ள ஐந்தாம் கட்ட விநியோகத்தில் முதலில் இடம் பெயர்ந்தோருக்கான உணவு விநியோகம் இடம் பெறுகின்றது என்றும்-

நாளை வரை அவர்களுக்கான விநியோகமே நடைபெறுமென்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனையோருக்கான விநியோகம், அரச அதிபரால் வெளியிடப்பட்ட பட்டியலின் அடிப்படையில் வழங்கப்படும்.

தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள தினங்களிலேயே பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் கிளைகளை நாட வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது.

(1-203-111)

### நாளை

*ஐப்பசி 12*

*ஞாயிற்றுக்கிழமை*

*29.10.2006*

*திதி : ஸப்தமி சித்தம்*

*நண்பகல் : 12.05*

*நட்சத்திரம் : உத்தராடம்*

*முன்னிரவு : 07.58*

*சுபநேரம் : 09.03 - 10.33*

*ராகுகாலம் : 04.33 - 06.03*

## 5ஆம் கட்ட விநியோகத்தில் நானாவிதப் பொருள்களும்

யாழ்ப்பாணம்,ஒக்.28

யாழ். ப.நோ.கூ. சங்கத்தின் கிளைகளில் ஐந்தாம் கட்ட உணவு விநியோகத்தின்போது நானாவிதப் பொருள்களும் வழங்கப்படவுள்ளன.

மல்லி, உள்ளி, தேங்காய் எண்ணெய், லைபோய், சன்லைட், தீப்பெட்டி ஆகிய பொருள்களே வழங்கப்படும்.

நாலாம் கட்ட உணவு விநியோகத்தின் போது இந்த நானாவித பொருள்களைப் பெறாதவர்களுக்கே இம்முறை வழங்கப்படவிருக்கின்றது. (1)

## யாழ். பிரதேச செயலர் பிரிவில் மண்எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக்.28

யாழ். பிரதேச செயலர் பிரிவில் இதுவரை இரண்டு லீற்றர் மண்எண்ணெய் பெறாத குடும்பங்களுக்கு இன்று சனிக்கிழமை தொடக்கம் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

மண்எண்ணெய் பெறாதவர்களை கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். பிரதேச செயலகத்தினர் கேட்டுள்ளனர்.

**மடத்தடி எரிபொருள் நிரப்பு நிலையம்**

ஜே/68 -றெக்கிளமேசன் கிழக்கு, ஜே/69 - றெக்கிளமேசன் மேற்கு, ஜே/70 - குருநகர் கிழக்கு, ஜே/71- குருநகர் மேற்கு, ஜே/72 - சின்னக்கடை, ஜே/74 - யாழ். நகர் கிழக்கு, ஜே/75-சுண்டுக்குளி தெற்கு, ஜே/76 - சுண்டுக்குளி வடக்கு.

**மாக்பெட்**

ஜே/73 - யாழ் நகர் மேற்கு, ஜே/77-மருதடி, ஜே/78-அத்தியடி, ஜே/79-சிறாம்பியடி, ஜே/80-பெரியகடை, ஜே/81-கோட்டை, ஜே/82-வண்ணார் பண்ணை, ஜே/83 - கொட்டடி. (1-203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் பல இடங்களில் கனமழை நீடிப்பு மண்சரிவு, இடிமின்னலுக்கு நால்வர் பலி!

கொழும்பு, ஒக். 28

நாட்டின் வடமேல், சப்ரகமுவ மேல் மாகாணங்களில் நேற்றுக் காலை முதல் கடும் மழை பெய்து வருகிறது. இதனால், ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, மண்சரிவு ஆகியவற்றால் நேற்று வரை நால்வர் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

சீரற்ற காலநிலை இன்றும் நிலவுமெனவும் வடமேல், சப்ரகமுவ, மேல் மாகாணங்களில் இன்றும் காலை முதல் மழை பெய்யுமெனவும் நாட்டின் ஏனைய பகுதிகளில் மாலைவேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யுமெனவும் வானிலை அவதான நிலையம் நேற்றுத் தெரிவித்தது.

மழை காரணமாக மொத்தம் 15 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் பணிப்பாளர் ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

நுவரெலியா, கம்பளை வீதியில் வெதமுல்ல தொண்டதெனிய என்ற இடத்தில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக இவ்வீதியில் போக்குவரத்து இடம்பெறவில்லையென கொத்மலை பொலிஸார் தெரிவிக்கின்றனர். வீதியை சீர்திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் இன்று அநேகமாக திருத்த வேலைகள் முடிவடைந்து வீதி போக்குவரத்துக்கு திறந்து விடப்படலாமெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹா, வத்தளை, கட்டான, ஜா-எல, களனி, காத்தான்குடி, புத்தளம், வஸ்கடுவ, களுத்துறை, நாகொட, பொத்துபிட்டிய, தங்கொட்டுவ ஆகிய பகுதிகளில் கடும் மழை காரணமாக வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

காலியில் மின்னல் தாக்கி மூவர் கொல்லப்பட்டனர். மண்சரிவு காரணமாக நெலுவவில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. (ஐ)

## கத்தோலிக்க பாடசாலைகளுக்கு மிரட்டல்

தலைநகர் கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் உள்ள கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ பாடசாலைகளில் நத்தார் நிகழ்ச்சிகள் எவற்றையும் ஏற்பாடு செய்து நடத்தக்கூடாது என்று அநாமதேய கடிதங்கள் மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கத்தோலிக்கப் பாடசாலைகள், ஆரம்பப் பள்ளிகள், கிறிஸ்தவ மிஷனரிகள் போன்றவற்றுக்கு இவ்வாறு மிரட்டல் கடிதங்கள் கிடைத்துள்ளன என்று கூறப்படுகிறது. இதனால் பாடசாலை நிர்வாகங்கள் அதிர்ச்சி அடைந்துள்ளன.

## தொண்டு நிறுவனப் பணியாளரை யாழ். செம்மணிப் பகுதியில் காணோம்!

யாழ்ப்பாணம், ஒக்.28

அரசு சாராத தொண்டு நிறுவனம் ஒன்றின் களப் பணியாளர் ஒருவர் யாழ். செம்மணிப் பகுதியில் மர்மமான முறையில் காணாமற் போயிருக்கின்றார்.

'வன்முறையற்ற ஜனநாயக செயற்பாட்டாளர்களின் குழு' எனப்படும் (என்.வி.டி.ஏ.ஜி.) தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த தியாகராஜா சஜிந்தன் (வயது-28) என்பவரே - ஏ-9 வீதியில் - செம்மணி - அரியாலை மாம்பழம் சந்திப் பகுதியில் இராணுவச் சோதனை நிலையம் அருகே கடைசியாகத் தென்பட்டபின் காணாமற் போயிருக்கிறார் என்று உறவினர்கள் கூறியிருக்கின்றனர்.

காணாமற்போன பணியாளர் சாவகச்சேரி - நுணாவில் பகுதியைச் சேர்ந்தவர்.

இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை-

அண்மைய நாள்களில் செம்மணி பகுதியில் ஆசிரியர் உட்பட ஆறு இளைஞர்கள் காணாமற்போயிருக்கின்றனர் என்று தகவல்கள் கூறுகின்றன.

அதேவேளை -கல்வியங்காட்டுப் பகுதியைச் சேர்ந்த இரும்புக் கடையில் வேலை செய்யும் அருணகிரிநாதன் சுதன் (வயது-23) என்பவரை கடந்த 25 ஆம் திகதி முதல் காணவில்லை என அவரது உறவினர் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர். (ஐ-1-79)

## புதுக்கு டியிருப்பில் மின்னல் தாக்கி இளைஞன் மரணம்

கிளிநொச்சி, ஒக்.28

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் மரணமானார்.

புதுக்குடியிருப்பு பத்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த வைரத்து ஜெயந்தன்(வயது - 28) என்பவரே மரணமானவராவார்.

இச் சம்பவத்தில் அருன் (வயது - 28), ஆர். புவனேஸ்வரி (வயது - 42) ஆகியோர் காயமடைந்தனர். (அ-1)

## அனுமதி அட்டை கிடைக்காதோரும் தோற்ற வசதி

தேசிய கல்வி நிறுவனத்தினால் இன்று நடத்தப்படும் கல்வி மாணி அனுமதிப்பரீட்சைக்கு விண்ணப்பித்து அனுமதி அட்டை கிடைக்காதவர்களை-

பரீட்சை நடைபெறும் நிலையமான யாழ். இந்துக்கல்லூரிக்கு காலையில் சமூகமளித்து பரீட்சைக்குத் தோற்றுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ-1)

## வாகரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணியளவில் வெலிகந்தை, கரடிக்குளம் முகாம்களிலிருந்து மோட்டார் மற்றும் ஆட்லறி ஷெல் தாக்குதல்களைத் தொடுத்த இராணுவத்தினர், திருக்கோணமடு வழியாகப் படை நகர்த்தலை வாகரைப் பகுதியை நோக்கி மேற்கொண்டனர். இதில் சுமார் 300 படையினர் ஈடுபட்டிருந்தனர். இந்தப் படை நகர்வை எமது போராளிகள் பதில் தாக்குதலைத் தொடுத்து முறியடித்து, அவர்களைப் பின்வாங்கச் செய்து விட்டனர். மோதல் இரண்டு மணி நேரம் நீடித்தது.

சேதவிபரங்கள் அறிவிக்கப்படவில்லை - என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக அரச தரப்பு தகவல்களை உடனடியாக அறிந்துகொள்ள முடியவில்லை.

## ஊடகங்களுக்கு செய்தி வழங்குவதில் அரச பேச்சுக் குழுவினர் பாரபட்சமாம்!

ஜெனிவா, ஒக். 28

சமாதானப் பேச்சுத் தொடர்பான தகவல்களை வழங்குவதில் அரச பேச்சுக் குழுவினர் பாரபட்சமாக நடந்துகொள்கின்றனர் என்று ஜெனிவாவில் தங்கியுள்ள ஊடகவியலாளர்கள் சிலர் குறைப்பட்டுக் கொள்கின்றனர்.

தென்னிலங்கையின் சிங்கள, ஆங்கில மொழி ஊடகங்கள் சிலவற்றின் செய்தியாளர்கள், படப்பிடிப்பாளர்கள் அடங்கிய பெரும் ஊடகவியலாளர் பரிவாரம் ஒன்றையும் அரச தரப்பு இம்முறை ஜெனிவாவுக்கு அழைத்துச் சென்றிருப்பது தெரிந்ததே.

அரசுடன் முரண்படாத - முரண்டு பிடிக்காத - தனியார் செய்தி நிறுவனங்களைச் சார்ந்த ஊடகவியலாளர்களையே அரசு, தனது செலவில் ஜெனிவாவுக்கு அழைத்து வந்து அவர்களுக்குச் சகல வசதிகளையும், சலுகைகளையும் வழங்கி அங்கு தங்க வைத்துள்ளது என்று கூறப்படுகிறது.

இவ்வாறு அரச செலவில் அழைத்து வரப்பட்டிருக்கும் செய்தியாளர்களுக்கே அரச பேச்சுக் குழுவினர் செய்திகளையும் தகவல்களையும் வழங்குகின்றனர். ஏனையோரைப் பாரபட்சமாக நடத்துகின்றனர் என்று ஏனைய ஊடகவியலாளர்கள் குறைபட்டுக் கொள்கின்றனர்; விசனம் தெரிவிக்கின்றனர்.

தத்தமது நிறுவனங்களின் செலவில் ஜெனிவாவுக்குச் செய்தி சேகரிக்க வந்துள்ள ஊடகவியலாளர்கள், செய்தி வழங்குவதில் தாங்கள் பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர் என்று கூறியிருக்கின்றனர்.

இதேவேளை-

'சிரச' வானொலி, தொலைக் காட்சி, 'எம்.ரி.வி.' தொலைக்காட்சி, 'சக்தி' வானொலி, தொலைக்காட்சி ஆகியன தத்தமது செய்தியாளர்களையும் படப்பிடிப்பாளர்களையும் தத்தமது நிறுவனச் செலவிலேயே ஜெனிவாவுக்கு அனுப்பியிருக்கின்றன என்று குறிப்பிட்ட நிறுவனங்களின் நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சண்டே லீடர்' மற்றும் கொழும்பில் வெளியாகும் தமிழ்ப் பத்திரிகைகள் சிலவும் தத்தமது பிரதிநிதிகளைத் தமது நிறுவனங்களின் செலவிலேயே ஜெனிவாவுக்கு அனுப்பி வைத்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சிறுசிறு விடய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றனர் என்று பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

★ கேள்வி:- பேச்சுக்கள் தொடர்பாக உங்களின் கருத்து என்ன?

● பதில்:- இப்பேச்சில் இரண்டு தரப்புகள் இருக்கின்றன. ஒன்று அரசு மற்றொன்று புலிகள். எது குறித்து விவாதிப்பது என்பது நாளைய பேச்சில்தான் (சனிக்கிழமை) முடிவாகும். இரண்டுதரப்புகளுமே தங்களுடைய கருத்துக்களைக் கூற விரும்புகின்றன. அதே சமயம் ஒரு தரப்பு மற்றைய தரப்புக் கூறுவதைக் கேட்க வேண்டும். அரசைப் பொறுத்தளவில் இந்தச் சண்டையை முடிவுக்குக் கொண்டு வருவதே எமது நோக்கம்.

அதற்காக இறுதித் தீர்வைக் கொண்டு வருவது தொடர்பாகப் பேசவேண்டும். அதை விட்டுவிட்டு சிறிய சிறிய விடயங்களைப் பற்றிப் பேசி நேரத்தை வீணடிக்கக் கூடாது.

இந்த சண்டையை முடிவுக்குக் கொண்டு வந்து மக்கள் அமைதியாக வாழ வழிசெய்ய வேண்டும்.

★ கேள்வி:- இந்தப் பேச்சு வெற்றிபெறும் என்பதில் உங்களுக்கு எந்த அளவிற்கு நம்பிக்கை உள்ளது?

● பதில்:- இந்தப் பேச்சுக் குறித்து எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இரு தரப்பினரும் வந்திருக்கிறார்கள். இது குறித்து நாட்டில் மக்களிடம் மிகுந்த எதிர்பார்ப்பு நிலவுகின்றது. இதில் ஏதாவது முடிவு வரும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஒரு நல்ல முடிவு ஏற்படும் என நான் நம்புகின்றேன்.

★ கேள்வி:- நீங்கள்கூறும் இறுதி முடிவை எட்டுவதற்காக முதற்கட்டமாக எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கத் தயாராக உள்ளீர்கள்? ஏ-9 பாதையைத் திறப்பதை அரசு சாதகமாகப் பரிசீலிக்குமா?

● பதில்:- நீங்கள் மீண்டும் அதிக முக்கியத்துவமில்லாத பிரச்சினை குறித்துப் பேசுகிறீர்கள். நாங்கள் 25 ஆண்டுகளாக இருக்கும் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்துப் பேசுவோம் என்று ஏற்கனவே குறிப்பிட்டோம். அதை விட்டுவிட்டு பிற பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவது தீர்வுக்கு வழிவகுக்காது. தீர்வை ஏற்படுத்துவது குறித்த விடயங்கள் தொடர்பாக நாங்கள் பேசவேண்டும்.

- என்றார் பாலித கொஹென்ன.

(த-12)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரன் யோகன் (வயது-20) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மற்றவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இருவரினதும் சடலங்களும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக உப்புவெளிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். எனினும், இச்சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை -

திரியாய் தமிழ்க் கிராமத்தில் இருந்து ஐந்து இளைஞர்கள் கடந்த 22 ஆம், 23 ஆம் திகதிகளில் அடையாளம் தெரியாத ஆயுதக் குழு ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டிருந்தனர் என்று கிராமவாசிகள் கூறுகின்றனர். (ஐ)

## நிகழ்ச்சி நிரலுக்கு இருதரப்புகளையும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுக்குப் போகும் சமயத்தில் தெரியவந்தது.

இன்றைய பேச்சுக்கான உத்தேச நிகழ்ச்சி நிரல் தொடர்பில் இரண்டு தரப்புகளும் தத்தமது சொந்த நிகழ்ச்சித் திட்டத்துடனேயே பேச்சுக்கு வந்திருக்கின்றன என்று நோர்வேத் தரப்புக் கூறுகின்றது.

இரண்டு தரப்புகளையும் இணக்கப்பாட்டுக்குக் கொண்டு வந்து பொதுவான ஒரு நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பது என்பது உத்தேச பேச்சுகளை விடக் சடினமான பணியாக மாறியிருக்கிறது என்று ஜெனிவாவில் ராஜதந்திரவட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

தீவிரமடைந்திருக்கும் யுத்தச் சூழலைத் தணித்து மக்களின் உயிர் வாழ்க்கைப் பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்ட அவசர - அவசிய - மனிதாபிமானச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது குறித்தே முதலில் பேசப்பட வேண்டும் என்பதில் விடுதலைப் புலிகளின் பேச்சுக் குழு விடாப்பிடியாக உள்ளது.

யாழ். குடாநாட்டில் பெரும் மனித அவலம் உருவாகக் காரணமான 'ஏ-9' வீதியைத் திறக்கும் விடயத்தில் அரசு இணங்க வேண்டும். அதற்கு அரச பிரதிநிதிகள் முரண்டு பிடித்து மறுப்பார்களேயானால் அமைதிப் பேச்சுகள் முன்நகரவே மாட்டா என்று புலிகளின் பேச்சுக் குழுத் தலைவர் சு.ப. தமிழ்ச்செல்வன், ஜெனிவா நகரில் வந்து இறங்கிய கையோடு தெரிவித்து விட்டார்.

ஆனால், அரசுத் தரப்பும், அரசுப் பேச்சுக் குழுவினரும் வேறு விடயங்கள் பற்றிப் பிரஸ்தாபித்திருக்கின்றனர்.

ஜனநாயகத்தைப் பேணுதல், ஏனைய அரசியல் கட்சிகளின் அரசியல் உரிமை, மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், சிறுவர்களைப் படைக்குச் சேர்க்காது இருத்தல், அதிகாரப் பகிர்வு மூலம் அரசியல் தீர்வு போன்ற விடயங்கள் குறித்தே முதலில் பேச முடியும் என்று அரச தரப்பு வலியுறுத்தி உள்ளது.

இந்த விடயங்களே நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதில் அரசுக் குழு விடாப்பிடியாக இருக்கிறது என்று கூறப்படுகிறது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் இந்தக் கணமோ அல்லது அடுத்த கணமோ செயலிழந்து போகும் ஆபத்தான களநிலைமை நிலவுகையில் அதைச் சீர்செய்வதற்கான அடிப்படை ஏற்பாடுகளை முதன்மைப்படுத்த வேண்டும் என்கின்றனர் புலிகள் தரப்பினர்.

இவ்வாறு எதிரும் புதிருமான நிகழ்ச்சி நிரல்களுடன் பேச்சுக்கு வந்துள்ள இரு தரப்புகளையும், பொதுவான நிகழ்ச்சித் திட்டத்துக்குச் சம்மதிக்க வைப்பது, கல்லில் நார் உரிப்பது போன்று கடினமான பணியாக இருப்பதாக அனுசரணைத்தரப்பு வட்டாரங்கள்கூறுகின்றன.

பேச்சு ஆரம்பிப்பதற்கு முன்னர் பொதுவான நிகழ்சி நிரல் ஒன்றை உருவாக்க முடியாமற் போகும் பட்சத்தில், திட்டமிட்டபடி இரு தரப்புகளையும் இன்றைய தினம் பேச்சு மேசைக்குக் கொண்டு வந்து, பின்னர் பேசப்படும் விடயங்களை அங்கேயே - பேச்சு மேசையில் - தயார் செய்வது என்ற மாற்று யோசனை ஒன்றையும் அனுசரணைத் தரப்பினர் வைத்துள்ளனர் என்றும், அதற்கான் இணக்கத்தைப் பெற்றுக் கொள்வதிலும் அவர்கள் முயற்சி எடுப்பர் என்றும் ஜெனிவாவில் சில வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (ஐ-2)

## பேச்சின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நள்ளிரவு வரை இணக்கம் ஏற்பட்டிருக்கவில்லை.

இன்று காலை முதலில் இருதரப்பு தலைவர்களினதும் ஆரம்ப அறிக்கைக்குப் பிறகு பேச்சில் ஆராயப்படும் விடயங்கள் தொடர்பாக - பேச்சு மேசையில் அமர்ந்து நோர்வே அனுசரணையாளர்களின் முன்னிலையில் இரு தரப்பினரும் பேசி முடிவுசெய்யலாம் என்ற நிலையே இன்று அதிகாலைவரை (இலங்கை நேரப்படி) தொடர்ந்தது.

எனினும், பேச்சு ஆரம்பமாவதற்கு முன்னதாகவே அதற்கான நிகழ்ச்சி நிரலை - பேசப்படவிருக்கின்ற விடயங்கள் பற்றிய இணக்கப்பாட்டை - ஏற்படுத்துவதற்காக அனுசரணையாளர்கள் இலங்கை நேரப்படி இன்று அதிகாலைக்குப் பின்னரும் இரு தரப்பினரையும் மாறி மாறிச் சந்தித்து தொடர்ந்தும் முயற்சி செய்துகொண்டிருந்தனர். (உ)


SPOKEN ENGLISH
சனி, ஞாயிறு 11 a.m.
BY: BRITTO
வகுப்பு நடைபெறுகிறது
யூனிவேர்சல்

CHEMISTRY
Inorganic paper class
BY: S.VASU
ஆரம்பம்
29.10.06 (6.30 a.m.)
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்.

அகதிகள் மற்றும் மனிதாபிமான விசா
ஆஸ்திரேலியா மற்றும் கனடா அரசினால் மனிதநேய அடிப்படையின் கீழ் வழங்கப்படும் நிரந்தர வதிவிட விசா விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 7835
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
தொ.பே.: 222 7310


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org